கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
மாதம் இருமுறை
18-2-1973
30 காசு






AIYARS-C.165 TM

மணி & மினி

"ஆந்திரா, தெலுங்கானா விளையாட்டு விளையாடலாமா?"

"ஐயோ, சண்டை போட நான் தயார் இல்லே!"





உயிர்களிடத்து அன்பு
வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்

— பாரதியார்

கோகுலம்

மலர் 1 :: இதழ் 22

பிப்ரவரி 18, 1973

பரிதாபி, மாசி 7

சந்தா விவரம் :

தனிப் பிரதி
விலை 30 காசு

ஒரு வருடம்	ரூ.	7–00
ஆறு மாதம்	ரூ.	3–50
வெளி நாடுகள்	ரூ.	18–00



அட்டைப் படச் சிறுமி:

நீங்களும் ஓர் இளநீர் வாங்கிக்கறீங்களா? சேர்ந்து குடிக்கலாம். வெய்யில் கொளுத்தறது இங்கே!

வண்ணப்படம் :
ஓரலிங்கம்

பையலோ டிணங்கேல்

சிறு பிள்ளைத்தனமாகப் பேச்சும் செயலும் கொண்டவனுடன் சேராதே. சேர்ந்தால் அவன் நடத்தையால் நீயும் கெடுவாய். இது பேசினால் அல்லது இது செய்தால் இந்தப் பயன் உண்டாகும் என்கிற அறிவும் எண்ணமும் இல்லாமல் பொறுப்பற்று நடந்து கொள்ளும் தன்மை சிறுபிள்ளைத்தனம். அத்தகையாரோடு இணங்காதே என்றால் நீ அப்படி நடந்து கொள்ள வேண்டாம் என்பது சொல்லாமலே விளங்கும்.

□ □ □ □ □ □ □ □ □

அருமைக் குழந்தைகளே !

உங்களுக்காகக் கோகுலம் ஆரம்பிக்கப்பட்டபோது உங்களுக்காகவே ராஜாஜித் தாத்தா எழுதியதைப்போல் 'ஆத்தி சூடி' கையெழுத்துப் பிரதி எங்களுக்குப் புதையலாகக் கிடைத்தது. பெருமகிழ்ச்சி யடைந்தோம். இந்த ஆத்திசூடியை ராஜாஜித் தாத்தா எப்போது எழுதினார் தெரியுமா? திருச்செங்கோட்டில் காந்தி ஆசிரமம் நிறுவி நடத்தி வந்தபோது, 1932ம் ஆண்டில் எழுதினார். அதை ராஜாஜித் தாத்தா அவர்கள் உங்களுக்காக மறுபடியும் படித்துப் பார்த்து அதில் சில திருத்தங்களையும் செய்து கொடுத்தார். இந்த இதழில் மேலே வெளியாகியுள்ளதுவரை தான் ஆத்திசூடிக்கு ராஜாஜித் தாத்தா விளக்கம் எழுதி யுள்ளார். ஆகவே ராஜாஜித் தாத்தா எழுதியது வரை மட்டும் இந்த ஆத்திசூடியை வெளியிட்டு நிறுத்துகிறோம். ஔவையார் அருளிச்செய்த அழியாப் புகழ் பெற்ற ஆத்தி சூடி, ராஜாஜித் தாத்தாவின் விளக்கங்களினால் உங்கள் உள்ளங்களில் எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கட்டும். ஏகலைவனைப்போல் ராஜாஜித் தாத்தாவை நினைத்தபடியே பாக்கியுள்ள ஆத்திசூடி வாக்கியங்களையும் நீங்களே படித்துப் பயன் பெறுவீர்களாக.

— ஆசிரியர்

ஆத்திசூடி
ராஜாஜி



கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்தவாரியார்

அந்தண மாதர்கள் அன்னமிட்டது

ஒரு நாள் பலராமரும் பரந்தாமனும் கோபால குமாரர்களுடன், பசுக்களைக் கானகத்தில் மேயவிட்டு ஒரு குளிர்ந்த சோலையில் தங்கியிருந்தார்கள்.

அப்போது ஆயர் சிறுர்கள் பசியினுல் களைத்து, கண்ணபிரானை வணங்கி, ''சகல உலகங்களையும் காக்கும் கருணைநிதியே! நாங்கள் பசித் துயரத்தால் வேதனை அடைந்துள்ளோம். எங்களுக்கு அருள் புரிவீராக'' என்று வேண்டிக் கொண்டார்கள்.

கண்ணபிரான் கோபாலர்களைப் பார்த்துக் கருணை புரிந்து, புன்னகை செய்தார். ''குணநலம் மிகுந்த கோபாலர்களே! கம்சனுடைய கொடுமைக்கு அஞ்சி வேதவித்துக்களான வேதியர்கள், தங்கள் மனைவியர் களுடன் பிருந்தாவனத்துக்கு அருகில் உள்ள வனத்தில் சிறந்த யாகம் செய்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அங்கே சென்று, 'பலராமகிருஷ்ணர்கள் அனுப்பினார்கள். எங்களுக்கு அன்னம் வேண்டும்' என்று கேளுங்கள். அவர்கள் தரும் அன்னம் முதலியவற்றைப் பெற்று வாருங்கள்'' என்று பணித்தருளினார்.

கோபால குமாரர்கள் யாகசாலைக்குச் சென்று, அந்தணர்களை அஞ்சலி செய்து, ''செந்தண்மை பூண்ட அந்தணர்களே! நாங்கள் பலராமகிருஷ்ண மூர்த்திகளால் அனுப்பப்பட்டு வந்தோம். வயிற்றுப் பசியால், வாடுகின்றோம். எங்கள் பசி தீர அன்னமிடுங்கள்'' என்றார்கள்.

கற்றும் அறிவற்ற அந்த அந்தணர்கள் பலராமகிருஷ்ணர்களை பரமாத்மாக்கள் என்று அறியாதவர்களாய், உண்டு என்றும் இல்லை என்றும் கூறாமல் மௌனமாய் இருந்தார்கள். கற்சிலைகள் போல் இருந்த வேதியர்களின் தன்மையைக் கண்ட கோபால குமாரர்கள் மீண்டு வந்து, கண்ணபிரானை வணங்கி நடந்ததை நவின்றார்கள்.

பகவான் சிரித்து, ''நீங்கள் கவலைப்பட வேண்டாம். வேதியர்களின்



உத்தம பத்தினிகளிடம் போய், நமது கட்டளையைக் கூறி அன்னம் கேளுங்கள்'' என்று கட்டளையிட்டருளினார்.

அவர்கள் அவ்வாறே சென்று பிராமணப் பத்தினிகளைக் கண்டு, வணங்கி நின்று, ''அன்புள்ள அந்தணகுல அன்னைமீர்! நாங்கள் பலராம கிருஷ்ணருடைய ஏவலால் வந்துள்ளோம். பசிக்கு அன்னம் இட வேண்டும்'' என்றார்கள்.

மதிநலம் படைத்த அம்மாதர்கள் மகிழ்ச்சியுடன் அவர்களை வரவேற்பு செய்தார்கள். ''உலகமுண்ட உத்தமனுக்கும், அப்பரமனுடைய பக்தர்களாகிய உங்களுக்கும் அன்னம் படைக்க நாங்கள் என்ன தவம் செய்தோமோ?'' என்று கூறினார்கள்.

சுவை மிகுந்த பட்சணங்கள், குழம்பு தயிர், நெய், அன்னம் இவைகளைக் கூடைகளில் அடுக்கிக் கொண்டு, மிகுந்த பயபக்தியுடன் புறப்பட்டார்கள்.

இதைக் கண்ட வேதியர்கள் வெகுண்டு எழுந்தார்கள். ''நீங்கள் செய்வது நியாயமா? இது முறையா? கணவர்களின் கருத்துக்கு மாறாகச் செய்யலாமா?'' என்று கூறித் தடுத்தார்கள். வேகமாகச் செல்லும் வெள்ளத்தை உப்பு மூட்டையால் தடுத்து நிறுத்த முடியாதுதானே? கணவன்மார்களின் சொற்களை அவர்கள் காதில் வாங்காமல் சேயை நாடிச் செல்லும் தாய்போல் விரைந்து புறப்பட்டார்கள். கணவர்களைப் பார்த்து, ''உங்கள் அறிவு இருந்தவாறு என்னே? நீங்கள் செய்யும் யக்ஞபதிதானே கண்ணபிரான்? அவர் பூபாரம் தீர்க்க வந்த புருஷோத்தமன். அவரைக் கற்பார்ந்த காலம் மாதவஞ் செய்தாலும் காண முடியுமா? நாங்கள் செய்த பண்டைத் தவத்தால் இந்த அரிய வாய்ப்புக் கிடைத்துள்ளது'' என்று கூறிவிட்டு, கண்ணபிரானிடம் வந்து அன்னம் படைத்தார்கள். அரிமுகுந்தனை அன்புக் கண்களால் கண்டு கண்டு களிகூர்ந்தார்கள். துதி செய்தார்கள். பகவான் அவர்களுக்கு அருள் புரிந்தார்.

பின்னர் அறிவு தெளியப் பெற்று அந்தணர்கள் ஆயர்குலக் கொழுந்தாகிய அண்ணலை அணுகி மன்னிக்குமாறு குறையிரந்து கும்பிட்டு நின்றார்கள். எம்பெருமான் அவர்களுக்கு அருள் புரிந்து அனுப்பினார்.



கண்ணன் குன்றெடுத்துக் குடை பிடித்தல்

ஒரு சமயம் கோபாலர்களின் தலைவனான நந்தகோபாலனும், உபநந்தனும் ஞானமே வடிவாய கண்ணபிரானைப் பார்த்துக் கூறுவார்கள்.

''எங்கள் மாதவத்தால் வந்த மணி விளக்கே! ஆயர்குலக் கொழுந்தே! யாதவர்களாகிய நமக்கு ஆடுமாடுகள்தான் ஆதாரம். ஆடுமாடுகளுக்குச் செடிகொடிகளும் வனமும் ஆதாரங்கள். இந்தச் செடி கொடிகளுடன்கூடிய வனத்துக்கு மழை ஆதாரம்; அந்த மழைக்கு அதிபதி இந்திர பகவான். இந்திரனை வழிபட்டால் மேகவாகனனாகிய இந்திரன் மகிழ்ச்சி அடைவார். அதனால் மழைக் காலத்தில் பொழியும் மழையால் வனஞ் செழிக்கும்; வனத்தால் கால் நடைகளாகிய ஆடுமாடுகள் செழிக்கும். அதனால் நாம் செழிப்பு

அடைவோம். இந்தக் காரணத்தால் இந்திர வழிபாட்டுக்குரிய சாதனங்களை ஆயத்தம் புரிகின்றோம். இந்திரவழிபாடு உத்தராயண புண்ணிய காலத்தில் செய்வது மரபு. எல்லாம் தெரிந்த எம்பெருமானே! இந்த இந்திர யக்ஞத்தை நீ முன் நின்று நடத்த வேண்டும்'' என்றார்கள்.

இந்திரன் மூவுலகங்களுக்கும் தானே தலைவன் என்று மனத்தில் செருக்குற்றிருந்தான். அதனைத் திருவுளத்தால் அறிந்த பரந்தாமன் ''இந்திரனைச் செருக்கடக்கி ஆட்கொள்ள வேண்டும்'' என்று திருவுளங் கொண்டார்.

'' தந்தையே! நான் கூறும் வேத சாரமான கருத்தைக் கேட்பீராக. ஆன்மாக்கள் முன் செய்த நல்வினை தீவினைகட்கு ஏற்ப சுகதுக்கங்களை அனுபவிக்கின்றன. ஆன்மாக்கள் நுகரும் இன்ப துன்பங்களுக்குக் காரணம் இந்திரன் ஆக மாட்டான். பாயசத்தை ஒரு கரண்டியால் படைப்பது போல் உயிர்கள் செய்த புண்ணிய பாவங்களுக்கு ஏற்ப நலந் தீங்குகளை இந்திரன் படைக்கின்றான். அவன் ஒரு கருவியே ஆகும். ஆதலால் உண்மையை நன்கு உணர்ந்தவர்கள் கருவியாகிய இந்திரனுக்கு விழா எடுத்து வணங்க மாட்டார்கள். எல்லாவற்றுக்கும் பரமகாரணன் பரம்பொருளே ஆகும். பரமாத்மாவுக்குத்தான் வழிபாடு செய்ய வேண்டும். இறைவன் மலைபோல் என்றும் அசையாது இருப்பவன். ஆதலால் மலைக்கு அதிபதியாகிய இறைவனைக் குறித்து நீங்கள் வழிபாடு செய்யுங்கள். இதுதான் நான்குவேதத் தீர்ப்பு. நீங்கள் இத்தனை நாள் இந்த உண்மை உணராது இந்திர யாகஞ் செய்து வந்தீர்கள். பாயசத்தைப் படைக்கின்றவனுக்கு நன்றி நவிலாமல் கரண்டிக்கு நன்றி நவில்வது அறிவுடைமை ஆகுமா?

''இன்று முதல் எல்லாம் ஆய எங்கும் நிறைந்த தேவ தேவனாகிய பரம்பொருளுக்கு வழிபாடு செய்யுங்கள்'' என்றார்.

எம்பெருமானே அங்கு ஒரு மலை வடிவாக நின்றார். ''அப்பா! இதோ தெரியும் இந்தமலை பரமாத்ம சொரூபம். இதற்கு வழிபாடு செய்யுங்கள். ஒரு மரத்தின் கிளைகள் போலவும் இலைகள் போலவும் இந்திராதி இமையவர்கள். இலைகளையா வழிபடுவது? எல்லாம் சேர்ந்த மரத்துக்கு அல்லவா வழிபாடு செய்ய வேண்டும்?'' என்று இனிமையாக எடுத்து இயம்பி யருளினார்.

இந்த மதுரமொழிகளைக் கேட்ட நந்த கோபன் முதலியோர் அங்கே மலை வடிவாக நின்ற இறைவனை வணங்கினார்கள். மலையின் அடிவாரத்தில் சந்தனம், அட்சதை, பன்னீர், மலர், இளநீர், பால், பழம் இவைகளை வைத்து அன்னங்களைக் குவித்துப் பாடியாடிப் பரவிப் பணிந்தார்கள்.

மலைக்கு அதிதேவதை எதிர்தோன்றி அருள் புரிந்தது. எல்லோரும் கண்ணீர் சொரிந்து உள்ளங் கசிந்து உவகை பூத்தார்கள்.

தன்னை அவமதித்து யாதவர்கள் தனக்கு வழிபாடு செய்யாமல் ஒரு மலைக்கு வழிபாடு செய்ததைக் கண்டு இந்திரன் வெந்தழல் போல் வெகுண்டான். ''இந்த யாதவர்களையும், இவர்களைக் கெடுக்கும் கிருஷ்ணனையும் ஒரு சேர அழிப்பேன்'' என்று கரத்தையும், சிரத்தையும் அசைத்தான். மேகங்களை அழைத்து, ''என்னை மதியாத ஆயர்களையும், அவர்களின் செல்வங்களாகிய ஆடு மாடுகளையும் கொட்டு மழை பொழிந்து அழியுங்கள்'' என்று கட்டளையிட்டான்.

வேகத்துடன் மேகங்கள் எழுந்தன. சூறைவளிக் காற்று வீசியது. இடைவிடாது மழை பொழிந்தன. வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஆடுமாடுகள் ''அம்மா! அம்மா!'' என்று அலறி அங்கும் இங்கும் ஓடின. புகலிடம் எங்கே என்று நாடின. ஆயர்கள் வாடினார்கள். மழையால் நனைந்து நடுங்கினார்கள். குளிரால் ஒடுங்கினார்கள்.

கருணைக் கடலாகிய கண்ணபிரான் அவர்களின் துன்பத்தைக் கண்டு திருவுளம் இரங்கினார். கோவர்த்தகிரியைப் பெயர்த்தெடுத்து ஒரு விரலால் குடையாகப் பிடித்தார். உலகங்களையெல்லாம் ஏந்தும் எம்பெருமான் அம்மலையை ஏந்தியது என்ன ஆச்சரியம்!

மலைக் குடையின் கீழ் ஆடுமாடுகளும் கோபாலர்களும் துன்பம் இன்றி இருந்தார்கள். மழை இடி முதலிய துன்பங்கள் அவர்களைத் தாக்கவில்லை. இவ்வாறு ஏழு நாட்கள் குன்றத்தைப் பெருவிரலால் தாங்கிக் குடை பிடித்தார். கன்றால் விளவெறிந்த கண்ணன், குன்றால் மழை தடுத்துக் காத்தருளினார்.

இந்த அற்புதத்தைக் கண்ட இந்திரன் கர்வம் அடங்கினான். மழை நின்றது. கண்ணபிரானுடைய பதமலர் மீது பணிந்து, ''என்னை மன்னிக்க வேண்டும்'' என்றான்.

பகவான் அவனுக்கு அருள் புரிந்து, ''சங்கராந்திக்கு முதல் நாள் போகியாகிய உன்னை மக்கள் வழிபாடு செய்வார்கள்'' என்று பணித்தருளினார். இதனாலேயே தை மாதப் பிறப்புக்கு முதல் நாள் போகியை வழிபடும் நாள் போகிப் பண்டிகை என்றுபேர் பெற்றது.

எல்லோரும் எம்பெருமான் இன்னருளால் இன்பமுற்றார்கள். (தொடரும்)

அமுதா அழுதாள்

அமுதா அடம்பிடித்தாள். அம்மா சொன்னதைக் கேட்கவில்லை. நேற்று மாலை வாங்கிய புது பூட்ஸைப் போட்டுக் கொண்டுதான் போவேன் என்றாள் பிடிவாதமாக. இரண்டு நாட்களாகவே எல்லாரிடமும் தான் புதுப் பூட்ஸ் வாங்கப் போவதைப் பற்றிப் பெருமை அடித்துக் கொண்டிருந்தாள். இன்றைக்கு அதை அணிந்து கொள்ளாமல் போனால் அவர்கள் என்ன நினைப்பார்கள். 'இந்த அம்மா என்ன இப்படி?' அமுதாவுக்கு ஆத்திரமாக வந்தது. 'அம்மா சொல்வதைக் கேட்க மாட்டேன்' என்று தனக்குள் கூறிக் கொண்டவள் ஓசைப்படாமல் புது பூட்ஸ்களை மாட்டிக் கொண்டு பள்ளிக்குக் கிளம்பி விட்டாள்.

வழியில் அவள் தோழி லதாவிடம் முதலில் தன் பூட்ஸைக் காட்டிப் பெருமை அடித்துக் கொண்டாள் அமுதா. லதா ஏழைப் பெண். சாதாரண பிளாஸ்டிக் செருப்பே வாங்க முடியாத அவளுக்கு இம்மாதிரிப் பளபளக்கும் பூட்ஸ் பற்றிக் கனவு கூடக் காண முடியாதே. அமுதாவும் லதாவும் பள்ளிக்குப் போனார்கள். ஓசைப்படாமல் புதுப் பூட்ஸை அவள் மாட்டிக்கொண்டு வந்து விட்டாலும் அது இப்போது ஓசைப்படுத்தியது! அமுதாவின் ஒவ்வொரு தப்படிக்கும் அதிலிருந்து 'கிய்' 'கிய்' என்று ஒலி உண்டாகியது. மணி அடித்து பிரேயர் முடிந்து பள்ளி அமைதியானதும் அமுதா தன் வகுப்புக்குள் நுழைந்த போது அவள் புது பூட்ஸின் 'கிய்' 'கிய்' ஒலி துல்லியமாக எல்லோரது கவனத்தையும் கவரலாயிற்று. மற்ற மாணவிகளும் மாணவர்களும் அமுதாவைப் பார்த்துக் கிசுகிசுத்துச் சிரித்தார்கள். ஆனால் அவர்கள் கிண்டலை அவள் பொருட்படுத்தவேயில்லை. பீரியடுக்குப் பீரியட் வகுப்பு மாறும்போது புது பூட்ஸின் ஒலி பெருந் தொல்லையாகப் போய்விட்டது. 'இந்தச் சனியனை ஏன் தான் போட்டுக்கொண்டு வந்தோமோ?' என்று அமுதாவே வேதனைப்படும் அளவுக்கு அதன் 'கிய் 'கிய்' ஒலி நாராசமாகிவிட்டது. அதுமட்டுமா? நாழியாக ஆக அது காலைக் கடிக்கவும் ஆரம்பித்தது. காலைத் தூக்கி வைக்க வைக்க அது இறுக்கி...என்னமாய் எரிகிறது! அன்றைக்கென்று அவள் டைம் டேபிள்படி டிரில் கிளாஸ், கைவேலைக்கிளாஸ் அது இது என்று வகுப்பு மாற வேண்டும்.



தன் தவிப்பை லதாவிடம் கண் கலங்கக் கூறினாள் அமுதா. ''பரவாயில்லை, பூட்ஸை வகுப்பில் கழற்றிக் காலடியில் வைத்துக் கொள்'' என்றாள் லதா. அவள் யோசனை இதமாக இருந்தது அமுதாவுக்கு. ஆனால் வகுப்பு முடிந்து வீட்டுக்குக் கிளம்பும்போது? பூட்ஸுக்குள் காலை நுழைக்கவே முடியவில்லை. பகலெல்லாம் வீம்புக்குப் போட்டுக் கொண்டு நடந்ததும், பூட்ஸ் கடியும் சேர்ந்து புருபுருவென்று கால் வீங்கி விட்டது. பாவம் அமுதா! புது பூட்ஸ்களைக் கையில் சுமந்தபடி ஸாக்ஸ் காலுடன் ரோட்டில் நடந்தாள். அந்தக் கோலத்தைக் கண்ட சில குறும்புக்காரப் பையன்கள் அவளைக் கோட்டாச் செய்தார்கள். அதைவிட வீட்டுக்குப் போனதும் அம்மா பூசை கொடுப்பாளே என்றுதான் அமுதாவுக்கு அழுகையாக வந்தது. லதா அருகிலிருந்ததால் அமுதா குமுறி அழாமல் இருந்தாள். ''கவலைப்படாதேடி அமுதா. நான் உன் வீட்டுக்கு வந்து உன் அம்மாவிடம் சொல்கிறேன். உன்னைத் திட்ட மாட்டாள்'' என்று சமாதானப்படுத்தினாள்.



ஆனால் நிலைமையை அறிந்ததும் அமுதாவின் அம்மாவுக்கு ரொம்பக் கோபம் வந்து விட்டது. ''அடங்காப் பிடாரின்னு நீ. நான் காலையிலேயே படித்துப் படித்துச் சொன்னேனில்லையா? நான் உத்தேசமா அளவு சொல்லாமல் வாங்கியிருக்கேன். இன்னிக்குப் போட்டுக் கொண்டு போக வேண்டாம்னு சொன்னேனே கேட்டியா? அத்தனை கர்வம் உனக்கு. சின்ன சைஸ் போலிருக்கு. அதுதான் அப்படிச் சத்தம் போட்டுக் காலையும் கடிச்சிருக்கு. புழுதியிலே புரட்டிப் பழசாக்கின பிறகு எப்படி மாத்த முடியும்?'' என்று கத்தினாள்.

அமுதா விம்மி அழுதாள். ''இனிமேல் நீ சொல்றதைக் கேக்கறேம்மா. இந்த பூட்ஸ் லதாவின் காலுக்குச் சரியாக இருக்கும். அவ கால் சின்னது. இதை அவளுக்கே கொடுத்திடலாம். நான் என்னோட பழைய பூட்ஸையே அது நன்னாக் கிழியறவரைக்கும் போட்டுக்கறேன்'' என்றாள். குற்றவாளியானாலும் தன் பெண்ணுக்குள்ள இரக்க குணத்தைக் கண்டு அமுதாவின் அம்மா மகிழ்ந்து போனாள். லதாவுக்கு அந்தப் பூட்ஸ்களை அமுதாவின் கைகளாலேயே கொடுக்கும்படி செய்தாள். அமுதா அன்று முதல் அம்மாவின் சொல்படி நடக்கும் நல்ல பெண்ணானாள்.

வினோத விருந்து

வாண்டுமாமா



அது ஒரு காப்பிக் கடை. காப்பி அவர்களுடைய தேசிய பானம். அதைப் பலர் சேர்ந்து அருந்துவது ஒரு விசேஷ நிகழ்ச்சி. எங்கு தெரியுமா? துருக்கியில்.

அந்தக் காப்பிக் கடையில் ஆறு பேர் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். காப்பிக் கெட்டில் அடுப்பில் தளைத்துக் கொண்டிருந்தது. ''கொதிக்கும் அந்தப் பாத்திரத்தில் இருக்கும் காப்பியை நான் அப்படியே குடிப்பேன்'' என்றார் அந்த அறுவரில் ஒருவர்.

''ஒரு பவுண்டு ஐஸை நான் அப்படியே விழுங்குவேன்'' என்றார் இன்னொருவர்.

அது மாரிக் காலம். கதகதப்பான காப்பிக் கடைக்குள் அமர்ந்தபடி இவர்கள் இப்படி வம்பு அளந்துகொண்டிருந்தார்கள். ''உங்களில் யார் எத்தனை சூடான காப்பியைக் குடிக்கிறீர்களோ, அதைவிட அதிக சூடான காப்பியை நான் உறிஞ்சிக் குடிக்கிறேன். நீங்கள் ஒரு பவுண்டு ஐஸை விழுங்கினால் நான் இரண்டு பவுண்டு ஐஸை விழுங்கிக் காட்டுகிறேன்'' என்றார் அந்த அறுவரில் ஒருவர், ஓங்கி மேஜையின் மீது ஒரு குத்து விட்டபடி. அவர் பெயர் நாஸிருதீன்.


மற்ற ஐவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். ''அப்படியானால் உனக்குச் சூடு குளிர் எதுவுமே இலட்சியமில்லையா?'' என்று கேட்டார்கள்.

''கிடையாது. இந்த மாதிரிப் பனி மழை பெய்யும் இரவில் கூட எனக்குக் குளிரைப் பற்றி லட்சியமில்லை'' என்றார் நாஸிருதீன். நண்பர்களுக்கு வியப்பான வியப்பு. திகைப்பான திகைப்பு!

நாஸிருதீன் தொடர்ந்தார். ''குளிர் சூடு இவற்றை என்னாலும் உணர முடியும். ஆனால் என் மனோதிடத்தினால் அதன் வேகத்தை வெற்றி கொள்ளுவேன். இதோ இப்போது வெளியே உறைபனி பெய்கிறது. கணப்பின் கதகதப்பு இல்லாமல் இந்த இரவு முழுதும் என்னால் வெளியில் இருக்க முடியும்'' என்றவர் சுவை மிக்க சூடான கறுப்புக் காப்பியை ருசித்துக் குடித்தார். துருக்கியர்கள் பால் கலக்காத காப்பியைத்தான் அருந்துவார்கள்.

''அப்படியானால் இன்று இரவே உங்களால் அப்படி இருந்து காட்ட முடியுமா?'' என்றார் நண்பர்களில் ஒருவர்.

''எந்த இரவு வேண்டுமானாலும் இருந்து காட்டுகிறேன். என்றைய இரவென்று குறிப்பிடுங்கள். அது எத்தனை மோசமான குளிர் இரவானாலும் சரி. ஒரு மெழுகுவத்தியினுடைய உஷ்ணத்



தின் அளவுக்கு நான் கதகதப்பை அனுபவித்தாலும் கூடத் தோற்றதாக ஒப்புக்கொண்டு உங்கள் ஐந்து பேருக்கும் விருந்து வைக்கிறேன். சரிதானே?'' என்றார் நாஸிருதீன்.

இப்படி அவர் சவால் விடுவதற்காகவே காத்திருந்தவர்கள் போல் அந்த ஐவரும் உடனே ''இன்றிரவே அந்தப் பந்தயத்தை வைத்துக் கொள்ளலாம். நாங்கள் நாளை மாலை உங்கள் வீட்டுக்கு விருந்துண்ணத் தயாராக வந்து விடுகிறோம், என்ன?... ஹ ஹா ஹா!'' என்று கொக்கரித்தபடி தங்கள் கனமான கம்பளிக் கோட்டுகளையும் குல்லாயையும் மாட்டிக் கொண்டு தங்கள் தங்கள் வீட்டில் உள்ள கதகதப்பான படுக்கையை நோக்கிக் கிளம்பி விட்டார்கள்.

அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பிய நாஸிருதீன் தம்முடைய கம்பளிக் கோட்டையும் குல்லாயையும் கையுறையையும் அணிந்துகொண்டு வெளியில் போய் நிற்க ஆயத்தமானார்.

காப்பிக் கடை முதலாளியான அலி கடையை இழுத்துப் பூட்டிக் கொண்டே, ''ஐயா நாஸிருதீன் அவர்களே, கடைக்குள் ஒரு பெரிய மெழுகுவத்தியை ஏற்றி வைத்து விட்டுப் போகிறேன். ஜன்னல் வழியாக அதன் வெளிச்சம் தெரியும். உங்கள் உற்சாகத்துக்கும் ஊக்கத்துக்கும் அந்த மெழுகுவத்தி கதகதப்பளிக்கட்டும். நான் வருகிறேன்!'' என்றபடி விடைபெற்றுக் கொண்டு போனான்.


அந்த நகரத்தின் நாற்சந்தியும் கடைவீதியுமான பகுதி அது. நாஸிருத்தீன் கொட்டும் பனியில் சொட்டச் சொட்ட நனைந்தபடி தன்னந் தனியாக நின்றார்.

இரவு இருளில் கனத்துக் கிடந்தது. நிசப்தமான இரவும் கூட. பனி விழுவதினால் உண்டாகும் மெல்லிய ஒலியைத் தவிர வேறு ஓசையே கிடையாது. நாஸிருதீன் அந்தச் சூழ்நிலையிலும் தமக்குள் சிரித்துக் கொண்டார். நாளை இரவு எந்த விருந்தும் கிடையாது. இந்தக் கொடிய குளிர் இரவை அவர் வெற்றி கொள்ளுவது நிச்சயம். உடலாலும் உள்ளத்தாலும் உறுதி படைத்தவர் நாஸிருதீன்.

கொடுமையான குளிர். கருமையான இரவு. கனமான பனி மழை. நாஸிருதீன் கால்கள் மரத்துப் போகாதிருக்க அவைகளை மாற்றி மாற்றி வைத்து ரத்த ஓட்டம் ஏற்படச் செய்து கொண்டிருந்தார். அடிக்கடி பூட்ஸ் கால்களால் தரையில் உதைத்தார். கைகளை அடிக்கடி தேய்த்துச் சூடு ஏற்றிக் கொண்டார்.

ஃபர் குல்லாயைப் பனி மூடியது. தோள்களின் மீதுள்ள கம்பளிக் கோட்டில் வெண் பனித்துகள்கள் மேடிட்டன. கழுத்துப் பட்டை வழியாகப் பனித்துகள் உள்ளே புகுந்து நடு முதுகில் போய்ச் சில்லிட்டது.

நாஸிருதீன் தமது பூட்ஸ் கால்களை அடிக்கடி தரையில் உதைத்துச் சுறுசுறுப் பேற்றிக் கொண்டிருந்தார். மெள்ள மெள்ள அந்த மார்க்கெட் சதுக்கத்தைச் சுற்றிச் சுற்றி நடந்தார். அப்பிக் கிடந்த இருளில் காப்பிக் கடைக்



குள் மினுக்கிடும் மெழுகுவத்தி ஒளியைப் பார்த்துக் கொண்டிருப்பது கொஞ்சம் மனத்துக்கு இதமாக இருந்தது. முதலாளி அலி கூறியது போல் அந்த வெளிச்சம் அவருடைய உறக்கத்துக்குக் கதகதப்பளிக்கத்தான் செய்தது.

ஒரு வழியாக இரவு கழிந்தது. சூரியன் உதயமாகி விட்டதை உணர்த்த மசூதியில் தொழுகைக்காக அழைக்கும் பக்கீரின் குரல் கேட்டது. பனியில் மண்டியிட்டுப் புதிய நாளை வரவேற்று அல்லாவுக்கு நன்றி செலுத்தித் தொழுதார் நாஸிருதீன்.

வெற்றி கண்ட நாஸிருதீனை வரவேற்கக் கூடிய ஊர் ஜனங்களில் அவருடைய ஐந்து நண்பர்களும் இருந்தார்கள். ''வாருங்கள் தோழர்களே! பாவம், ஆசையோடு எதிர்பார்த்த விருந்து போய் விட்டது'' என்றார், நாஸிருதீன்.

''அதெப்படி.... உனக்குக் கதகதப்புக் கொடுக்கத்தான் மெழுகுவத்தி எரிந்து கொண்டிருந்ததே. காப்பிக் கடை அலி விளக்கை உள்ளே எரிய விட்டுப் போயிருந்தானில்லையா?'' என்றார் நண்பர்களில் ஒருவர்.

''ஆமாம், ஆமாம். பந்தயத்தில் நீ தோற்றுப் போனாய். மெழுகுவத்தி உஷ்ணத்தைக் கொடுக்காதா என்ன?'' என்றார் இன்னொருவர்.

நாஸிருதீன் தம் நண்பர்களை மௌனமாக ஒவ்வொருவராகப் பார்த்தார் சில விநாடிகள். ''பந்தயத்தில் தோற்று விட்டேனா? உண்மைதானா?'' வெடித்த உதடுகள் விரிய மெல்ல முறுவலித்தார்.

''சரிதான். நிபந்தனைப்படி விருந்தளிக்கிறேன். இன்று மாலை என் வீட்டுக்கு வாருங்கள்'' என்று கூறியபடி தளர்ந்து தள்ளாடியபடியே தம் வீட்டுக்குப் போனார். ஜன்னலுக்கு உள்ளே மினுக்கிட்டுக் கொண்டிருந்த மெழுகுவத்தி வெளிச்சம்தான் அவர் சிந்தனையில் சுழன்று கொண்டிருந்தது.

நாஸிருதீன் அன்று பகல் முழுதும் நன்றாகத் தூங்கினார். மாலைத் தொழுகைக் கூப்பாடு கணீரென்று கேட்ட போதுதான் எழுந்திருந்தார். அப்படியே மண்டியிட்டுத் தொழுகையைச் செய்து கொண்டிருக்கும்போது நண்பர்கள் வரும் அரவம் கேட்டது.

''வாருங்கள். கதவு திறந்துதான் இருக்கிறது'' என்று குரல் கொடுத்தார். ஐவரும் தங்கள் காலணிகளைக் கழற்றி விட்டு உள்ளே வந்தார்கள். ஐவரையும் ஆரத் தழுவி வரவேற்றார் நாஸிருதீன். பிறகு ''மன்னிக்க வேண்டும். விருந்து இன்னும் தயாராகவில்லை'' என்றார்.

''அதனால் என்ன, பரவாயில்லை. மெள்ள ஆகட்டும். நாங்கள் காத்திருக்கிறோம்'' என்றபடி சம்மணமிட்டு விரிப்பில் வட்டமாக அமர்ந்துகொண்டார்கள். அவர்களுக்கு ஒரே குஷி, அறிவாளியான நாஸிருதீனையே வெற்றி கொண்டு விட்டோம் என்று.

காத்திருந்தார்கள் வெகு நேரம். ஒருவன் தன் குழைந்த வயிற்றைப் பிசைந்து கொண்டான். பசியான பசி அவனுக்கு. இன்னொருவன் உதட்டை நாக்கினால் ஈரமாக்கிக் கொண்டிருந்தான் அடிக்கடி. விருந்தின் வாசனை வருகிறதா என்று காற்றை இழுத்து, இழுத்து நுகர்ந்து பார்க்கலானான் ஒருவன். சமையல் உள்ளில் ஏதோ சத்தம் கேட்டதே தவிர மணம் எதையும் காணோம்.

வெகு நேரம் கழித்து வெளியே வந்தார் நாஸிருதீன். ''உங்களுக்கு அப்படியொன்றும் பசிக்காதென்று நினைக்கிறேன். சாப்பாடு இன்னும் தயாராகி முடியவில்லை'' . என்றார்.

''எங்களால் ஏதாவது உதவ முடியுமானால் செய்கிறோம்'' என்றான் பசி தாங்காத ஒருவன்.

''பேஷாக! வாருங்கள், உள்ளே'' என்று எல்லோரையும் அழைத்துப் போனார். சமையல் உள்ளே போனவர்கள் திகைத்துப் போய் அப்படியே வாசற்படியிலேயே நின்று விட்டார்கள்.

நாஸிருதீன் ஒரு பெரிய தாமிரப் பாத்திரத்தில் கரண்டியை விட்டுத் துழாவலானார். வழக்கமாகக் கோட்டை அடுப்பின் மீது இருக்க வேண்டிய அது இப்போது உத்தரத்திலிருந்து தொங்கிய சங்கிலியோடு இணைக்கப்பட்டிருந்த கொக்கியில் மாட்டப்பட்டிருந்தது. தரையிலிருந்து மூன்றடி உயரத்துக்கு மேலே தொங்கிக் கொண்டிருந்தது. அதன் நேர் கீழே தரையில் ஒரு மெழுகுவத்தி மினுக்கிட்டபடி எரிந்து கொண்டிருந்தது.

நாஸிருதீன் சொன்னார்: ''நான் வீட்டுக்கு வந்தவுடனேயே விருந்து தயாரிக்க ஆரம்பித்து விட்டேன். ஆனால் பாருங்கள் இன்னும்....'' என்றபடி தாமிரப் பாத்திரத்தினுள் விரலை வைத்துப் பார்த்து, ''உலை நீரில் சூடே ஏற மாட்டேன் என்கிறது... இது என்றைக்குக் கொதித்து உணவு தயாராகிறது? எப்படியும் கொதி வராமலா போகும்? நாளைக்குக் காலைக்குள் விருந்து தயாராகமலா இருக்கும்?'' என்றார்.

நண்பர்களின் முகங்களில் என்ன வழிந்திருக்கும் என்பதை உங்களுக்குச் சொல்லவா வேண்டும்?



விந்தை உலகம்

ஓரிக்ஸ்

ஓரிக்ஸ் மான்கள் பாலை வனங்களை அடுத்த வறண்ட பிரதேசங்களில், தண்ணீரே கிடைக்காத பகுதிகளில் வாழ்வது ஓர் அதிசயம். மழைக் காலத்தில் நீர் ஓடும் பாதைகளில் ஒருவகைப் புல் வளரும். இதுதான் இதன் முக்கிய உணவு. சிங்கத்தோடு போரிடும்போது அதன் உடலில் ஓரிக்ஸ் தன் கூரிய கொம்புகளைப் பதித்து அதைக் கொன்றுவிடும். ஆனால் சிங்கத்தின் உடலில் செருகிய தன் கொம்புகளை இதனால் மறுபடியும் உருவி எடுக்க முடியாது. ஆகவே அதன் அருகிலேயே இதுவும் இறந்து கிடக்கும்.

சிங்கம் பிராணிகளின் அரசன் என்று உங்களுக்கெல்லாம் தெரியும். எதற்கும் அஞ்சாதது. ஆனால் வீரம் மிக்க அந்தச் சிங்கம் ஒரு பிராணியைத் தாக்க யோசிக்கும்; ஏனென்றால் அந்தப் பிராணி சிங்கத்தின் உடலில் மரண காயத்தை ஏற்படுத்தும் என்ற பயத்தினால். அப்படிப்பட்ட அந்தப் பிராணி சாந்தத்துக்கும் பயந்த சுபாவத்துக்கும் பெயர் பெற்ற மான் என்றால் உங்களுக்கு வியப்பாக இருக்காதா?


மான்களில் எத்தனையோ வகைகள் உண்டு. எல்லா மான்களுமே பயந்த சுபாவம் கொண்டவை என்று கூறிவிட முடியாது. இங்குள்ள படத்தில் நீங்கள் பார்க்கிறீர்களே, அது ஓரிக்ஸ் என்ற இன மான். இம்மான்களில் நான்கு வகைகள் இருக்கின்றன. அரேபியாவிலும் ஆப்பிரிக்காவிலும் இவ்வகை மான்கள் காணப்படுகின்றன. இவைகளின் கொம்புகளைப் பாருங்கள். அழகைப் போலவே அபாயமும் கொண்டவை. ஆண்டவன் இந்த மான்களுக்கு அத்தகைய கொம்புகளைத் தற்காப்புக்காகவே அளித்திருக்கிறார். ஆண் மான்களைவிடப் பெண் மான்களுக்குக் கொம்புகள் நீளம். பின்நோக்கி வளைந்திருக்கும் கொம்புகள், இப்பிராணிகளின் உயரத்தைவிடக் கொஞ்சம்தான் குறைவானது. தாக்க முற்பட்டால் வீரத்தோடு போரிடக் கூடியது. இதன் தோள் பகுதித் தோல் மிக்க உறுதியானது. ஆகவே எதிரியின் எவ்விதத் தாக்குதலானாலும் இதற்குப் பெரிய காயம் ஏதும் ஏற்பட்டு விடாது. பண்டைக் காலத்து வீரர்கள் இந்த மானின் தோலைக் கேடயமாகப் பயன்படுத்தினார்கள். அத்தனை உறுதி. இதன் கொம்பினால் குத்துவாள்களைத் தயாரித்தனர்.

அரேபியன் ஓரிக்ஸ் கொஞ்சம் சிறிய உருவமுடையது. படத்திலுள்ளது இந்த வகைதான். தென் ஆப்பிரிக்க ஓரிக்ஸ் மான்களுக்கு ஜேம்ஸ் பாக் என்று பெயர். இவை உருவத்தில் பெரியவை. அது தவிர நடு முதுகிலும் அடி வயிற்றின் இரு பக்கங்களிலும் தொடையிலும் ஆழ்ந்த வண்ணத்தில் ஒரு கோடு போன்ற ஓட்டம் இருக்கும்.

கிழக்கு ஆப்பிரிக்காவில் பீஸா ஓரிக்ஸ் என்ற வகை காணப்படுகிறது. இதிலிருந்துதான் மேலை நாட்டு இதிகாசங்களில் வரும் 'யூனிகார்ன்' (தலையில் கொம்புடைய குதிரை)க் கற்பனை பிறந்திருக்க வேண்டும் என்கிறார்கள். வடக்கு மத்திய ஆப்பிரிக்காவில் வெள்ளை ஓரிக்ஸ் வாழ்கிறது. எகிப்தியர்களின் கல்லறைகளில் இவ்வகை மான்களின் 'மம்மிகள்' கிடைக்கின்றன. ஆகவே இதுவும் பண்டையப் பெருமையுடைய மான்கள். ஓட்டத்துக்குப் புகழ்பெற்றது மானினம். ஆனால் ஓரிக்ஸ்களோ வேகமாக ஓடக் கூடியவை அல்ல.

- விகே.




''பேசறது இன்னுமா யார் என்று தெரியல்லே? நான்தான் மாஜிக் நிபுணர் மதன்மோகன் பேசறேன்!''
என்னடாது? சிலேட்டுலே ஒரு முட்டை, தலையிலே முட்டை. எந்தப் பயல் இப்படி உன்னைக் குட்டினது?''
''ஐயையோ, வாத்தியாரைப் போய்ப் பயல்னு சொல்லலாமா?''
மூட்டைப் பூச்சி: ஈயாரே! இந்தத் தெருவிலே ஏதோ புதிசா பிரம்பு நாற்காலிக் கடை இருக்காமே எங்கே?
ஈ: தெருக்கோடியிலே இருக்கு. அது சரி, இங்கே எங்கேயோ புதிசா ஓர் ஓட்டல் வந்திருக்காமே எங்கே?
சிரிக்கச் சிரிக்க...!
சாமா
''சந்திரனுக்குத்தானே ராக்கெட்டிலே போறீங்க. கொஞ்சம் இருங்க. அந்த மாமாவுக்கு ஒரு புத்தாண்டு வாழ்த்து தரேன். கொண்டு போய்க் கொடுத்திடுங்க.''
''என்ன ஜோஸ்யர் ஐயா நீர்? என் கையைப் பார்த்து எனக்கு என்ன உத்தியோகம்னு சொல்லத் தெரியல்லியே?''
''நான் என்ன பண்ணறது? என் பூதக் கண்ணாடியை எவனோ திருடிக்கிட்டுப் போயிட்டான்!''

யார் அந்தச் சிறுவன்?

குறிஞ்சிப்பாடி கணேசன்



களத்து மேட்டில் வாழ்ந்தாலும்
காட்டு நிலவாய்ப் போகாமல்
இளமை வயதில் கல்லாத
இருளாம் கறையைப் போக்கிடவே

வளமை காணும் நாட்டினையே
வகுக்க வேட்கை கொண்டவனாய்
உளமு வந்து நூற்களினை
இரவல் பெற்றுப் படித்தனனே

இவ்வா றிருக்கும் ஒருநாளில்
இனிய நூலைப் படித்தவண்ணம்
எவ்வா றோஅவன் உறங்கிவிட்டான்
ஏனோ மழையும் பொழிந்ததுவே

சுடுபால் தொட்ட பூனையைப்போல்
சுருண்டு உறங்கியோன்
எழுந்திட்டான்
படித்த புத்தகம் தனைமறந்தான்
புத்தகம் மழையில் மிதந்திடவே

படித்த நூலை நினைந்திட்டான்
பிரியத்துடனே போய்ப்பார்த்தான்
படிந்த நீரின் சேறுலும்
பாழ்பட் டதுவே புத்தகமும்


இரவல் தந்தவர் இதையறிந்து
இழந்த நூலுக் கீடாக
இரண்டு முழுநாள் உழைத்துவிட்டு
ஏகுக இல்லம் என்றதனால்

நிறைவு கொண்டே உழைத்துப்பின்
நிம்மதி யுடனே மீண்டவனும்
குறைவே காணாப் பெரியோனும்
கூத்தரங் கதனில் மாண்டவனும்

அடிமை முறையை அகற்றிடவே
அல்லும் பகலும் உழைத்தவனும்
கொடிய உயர்வு தாழ்வுதன்னைக்
கொன்றே உயரச் செய்தவனும்

இவ்வா றிருந்தவன் யாரென்று
இயம்பிட உன்னால் முடிந்திடுமோ?
அவ்வா றுரைப்பின் அதுநன்றே
அன்றேல் கீழே விடை காண்பாய்!

அமெரிக் காவின் வரலாற்றில்
அழியாப் புகழைக் கொண்டவனும்
குமரிக் கரையின் தமிழர்களும்
கும்பிடும் **ஆப்பிர ஹாம்லிங்கன்!**



நமது ரயில்வே!

நீங்களெல்லாம் ரயிலில் பிரயாணம் செய்திருப்பீர்கள். நமது நாட்டின் ரயில்வேயைப் பற்றிய புள்ளி விவரங்களைப் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. இதோ சில சுவையான தகவல்கள்:

(1) நமது ரயில்வே தினமும் சுமார் 50 லட்சம் பயணிகளை வேற்றூர்களுக்கு அழைத்துச் செலகிறது.


2. நமது ரயில்வே தினசரி சுமார் 6,500 பாதைகளில் செயலாற்றுகிறது.

3. இந்தியாவில் உள்ள மொத்த ரயில்வே நிலையங்களின் எண்ணிக்கை, சுமார் 6,750.

4. நமது நாட்டில் உள்ள பயணிகள் ரயில் பெட்டிகளை எல்லாம் வரிசையாக ஒன்றன் பின் ஒன்றாக நிறுத்தி வைத்தால் 135 மைல் நீளமுள்ள ஒரு ரயில் தொடரை உருவாக்க முடியும்!

5. இந்தியாவில் உள்ள ரயில்வே நிலையங்களில் மிகச் சிறிய எழுத்தை உடையது ஒரிசாவில் உள்ளது. நிலையத்தின் பெயர் இப் (IB)

6. இந்தியாவிலேயே மிக அதிகமான தொழிலாளர்கள் வேலை பார்க்கும் நிறுவனம் நமது ரயில்வேதான். - **லென்ஸ்**



வாலாட்டிய வாலாட்டி

கிட்டு

அது ஓர் அழகான தோட்டம். அதில் ஏராளமான பழ மரங்களும் பூச்செடிகளும் நிறைந்திருந்தன. பல ஜாதி மரங்கள் கம்பீரமாக நிமிர்ந்து நின்றன. குளுமையான நிழல். பறவைகளின் குதூகலமான குரல்கள். அது ஒரு ரம்மியமான இடம். ஊரில் உள்ளவர்கள் இன்பமாகப் பொழுதைக் கழிக்க அந்தத் தோட்டத்துக்குத்தான் வருவார்கள். பணக்கார வீட்டார் தங்கள் குழந்தைகளைத் தள்ளு வண்டியில் வைத்து ஒற்றையடிப் பாதையில் உல்லாச நடைபோடுவார்கள்.

இப்படி ஒரு குழந்தையை அழைத்துச் சென்றபோதுதான் அது நிகழ்ந்திருக்க வேண்டும். குழந்தைகளின் கைகளுக்குக் கம்பளி உறை போட்டிருந்திருக்கிறார்கள். குழந்தைக்கு அது இம்சையாக இருந்ததோ அல்லது நழுவி விட்டதோ தெரியவில்லை. ஒரு கையுறை அந்த நடைபாதையில் அநாதையாகக் கிடந்தது. பஞ்சு போன்ற வெண்மை நிறத்தில் அழகிய சின்னஞ் சிறு கம்பளிக் கையுறை.


அந்த வழியாக நடந்து வந்த ஒரு பாட்டி அந்தக் கம்பளி உறையைப் பார்த்தாள். 'எந்தக் குழந்தையுடையதோ? இப்படி வழியில் கிடக்கிறதே' என்று அதை எடுத்து அருகே இருந்த ஒரு மரத்தின் சின்னக் கிளையில் அதன் சுருக்குக் கயிற்றால் தொங்க விட்டுச் சென்றாள்; 'கையுறையைக் காணாதவர்கள் நாளைக்கு இங்கு வந்தால் எடுத்துப் போகட்டுமே' என்ற நல்லெண்ணத்துடன்.

ஆனால் பாட்டி மாட்டிய மரத்தில் ஒரு வாலாட்டிக் குருவி வசித்து வந்தது. அது ரொம்பப் பேராசைக்காரக் குருவி. சிவந்த மார்பு. மஞ்சள் வால், நீல இறகு — பார்க்க அழகாக இருக்கும். ஆனால் பழகுவதற்கு முசுடு. அது வசித்து வந்த மரத்தில் ஏராளமான பழங்கள். வேறு எந்தப் பறவையையும் அந்த மரத்தில் உள்ள கனிகளைத் தொடவிடாது. அத்தனை சுயநலம். அந்த மரத்தில்தான் பாட்டி கம்பளி உறையை மாட்டி விட்டுப் போயிருந்தாள். வாலாட்டிக் குருவி 'க்விக்....க்விக்' என்று தாவித் தாவி அதன் அருகே வந்தது. 'இது என்ன இது புதிதாக?' என்று எட்டிப் பார்த்தது. 'என் உடல் அளவுக்குச் சரியாக இருக்கிறதே! ம்...

கதகதப்பாகவும் இருக்கிறது' என்று அதன் உள்ளே புகுந்து ஆராய்ந்தது. பிறகு வெளியே வர முயற்சி செய்தது. வெளியே வர முடியவில்லை.

''ஹ...ஹா! இதுவும் நல்லதுக்குத் தான். இதிலிருந்தபடியே வேடிக்கை செய்கிறேன். என்னுடைய இந்த மரத்தின் பழங்களைக் கொள்ளையடித்துப் போக வரும் பறவைகளை மிரட்டி விரட்டச் சரியான சாதனம் இது'' என்று மகிழ்ந்தது வாலாட்டிக் குருவி.

அது எண்ணியபடியே மைனா வந்தது. வாலாட்டி கம்பளி உறைக்குள்ளிருந்தபடியே தாவியது. அதனால் வெள்ளை உறை ஊசலாடியது. பாவம் மைனா பயந்து போய் ஓடியே போய்விட்டது. வாலாட்டிக்குச் சிரிப்பான சிரிப்பு! அடுத்துக் கிளி வந்தது.



'வந்தாயா? வா வா, ஒரு பழத்தைக் கூட விட மாட்டாயே' என்று கறுவிக் கொண்டே வாலாட்டி தாவித் தாவிக் குதித்தது. இதனால் வெள்ளைக் கம்பளி உறை வேகமாக ஆடியது. வாலாட்டி உள்ளிருப்பதை அறியாத கிளி உளறி அடித்துக் கொண்டு ஓடியது. இப்படி அந்த மரத்துக்கு வந்த ஒவ்வொரு பறவையையும் பயமுறுத்தி விரட்டியது வாலாட்டி. ''ஏதோ பூதம் பிசாசு வெள்ளையாக'' என்று கலவரத்துடன் பறவைகள் பேசிக்கொள்வதைக் கேட்ட வாலாட்டிக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி!

ஆனால் இந்தச் சிரிப்பும் மகிழ்ச்சியும் எத்தனைநேரத்துக்கு? அதற்குப் பசித்தது. அந்தச் சின்ன இடத்துக்குள் முடங்கிக் கிடப்பது அதன் உடலில் வலியைக் கொடுத்தது. 'தமாஷ் போதும். இனி வெளியேறிச் சாப்பிடப் போகலாம்' என்று வெளியேற முயன்றது! ம்ஹூம்... அதனால் வெளியே வர முடியவில்லை. கம்பளி உறை அதன் உடலில் பிடிப்பாகப் பொருந்தி விட்டது.

''ஐயையோ! இப்படியே இதற்குள்ளேயே இருந்தால் நான் பட்டினியால் சாகத்தான் வேணும்!'' வேதனையுடன் அழ ஆரம்பித்தது சுயநலம் கொண்ட வாலாட்டி. ''ஐயோ! என்னைக் காப்பாற்றுங்களேன்'' என்று கதறியது. ஆனால் ஒரு பறவையும் அதன் அருகில் வரவில்லை. ஏன்? அது ஏதோ 'பேய், பிசாசு' என்ற எண்ணத்தில் எல்லாப் பறவைகளும் எட்ட நின்றபடி அதையே பார்த்துக் கொண்டிருந்தன.


இரவு முழுவதும் அந்தச் சிறையிலேயே சிக்கித் தவித்துக் கண்ணீர் விட்டுக் கதறியபடி இருந்தது வாலாட்டி. ஒரு நாள் முழுவதும் ஏதும் சாப்பிடாதிருந்ததும், கவலையும் பீதியும் அதன் உடலை இளைக்கச் செய்து விட்டன. ஆகவே மறுநாள் வெளியேறுவதற்கான அதன் முயற்சி பலன் அளிக்க விடுதலையும் கிடைத்தது.

''அப்பனே ஆண்டவா! இனி என் சகோதரப் பறவைகள் எதையும் அலட்சியமாக மதிக்க மாட்டேன். பயமுறுத்த மாட்டேன். இம் மரத்தின் பழங்களை நான் மட்டுமே தின்பதற்கு வைத்துக் கொள்ள மாட்டேன். போதும் நான் பட்ட வேதனை. பீதி, பயம், பசி, வலி என்ன என்பதை நான் உணர்ந்து விட்டேன். இனி எல்லோருடனும் சிநேகமாயிருப்பேன்'' என்று கூறியபடி இறுகிப்போன இறக்கைகளை நீட்டி நீவிக் கொண்டு தாவித் தாவிப் பசியைத் தணித்துக் கொண்டது.

கதை: [illegible]
சித்திரம்: ரமணி..

ஷீலாவைத் தேடி




டைகரின் கண்களும் காதுகளும் எப்போதும் துடிப்பானவை. வழியில் ஒரு பெரிய கட்டிட வேலை. மேலே கலவை எடுத்துச் செல்லும் கை வண்டி, பலகை முறிவினால் கீழே விழுகிறது. அடியில் பையன்கள் விளையாடிக் கொண்டிருக்கின்றனர்...
சித்தாளின் கூச்சல் டைகருக்கு ஆபத்தை உணர்த்த, அடுத்த வினாடி விபத்துக்கு உட்பட இருந்த பையன் மீது தாவி அவனை அப்பால் தள்ளி விடுகிறது...
அப்பா! அந்த நாய் உன் மீது பாய்ந்து அப்படித் தள்ளியிருக்காவிட்டால் கலவை வண்டி உன் மீது விழுந்திருக்கும். ஐயோ! நினைக்கவே உடம்பு நடுங்குகிறது.
இந்த வேளையில் டைகரின் பார்வை வேறு ஒரு காட்சியில் பதிகிறது...
அதன் அன்புத் தோழியைக் கடத்தியவர்களை அது மறந்து விடுமா? தூரத்தில் அவர்களில் ஒருவனைக் கண்டதும் அவன் மீது பாய்கிறது.
அன்று அடித்த அடியில் நீ சாகவில்லையா சனியனே?
இழுத்து வா அதை. வெளியே விட்டிருந்தால் நமக்கு ஆபத்து..ம். சீக்கிரம். போலீஸ்காரர் வருகிறார்.... ஜல்தி...


தொடரும்..



★ வட இந்தியாவில் உள்ள லோதி வகுப்பாரில் இளைஞன் ஒரு விதவையை மணந்துகொள்ள வேண்டுமானால் ஒரு ஜதைக் காதணிகளை முதலில் மணந்துகொள்ள வேண்டுமாம். ஒரு வருஷம் கழிந்ததும் அக்காதணிகளை விவாகரத்து செய்தான பிறகுதான் விதவையை மணக்கமுடியும்.



★ மொகலாய மன்னர்கள் தங்கள் ஜனானவில் ஏராளமான மனைவிகளை வைத்திருப்பார்களாம். அது என்ன அதிசயம்! ஆப்பிரிக்காவில் வாழும் இம்பாலா என்ற ஆண் மான் நூறு மனைவிகள் சூழ வாழுமாம். இம்பாலா கார் வைத்திருப்பவர்களும் இப்படித்தானா என்று கேட்காதீர்கள்!



★ கடலில் உள்ள அ
புதங்கள் அளவிட மு
யாதவை. மேலே உ
ளது முள்ளம் பன்ற
மீன். இதைச் சாப்பி
டால் விஷம். தற்கொ
செய்துகொள்ள விரு
பும் ஜப்பானியர்க
இந்த மீனை உண்பா
களாம்.




★ ஆப்பிரிக்காவில் உள்ள லேவேல் இனத்தில் ஆணும் பெண்ணும் தங்கள் தலை முடியை முகத்துக்கு மட்டும் இடைவெளி விட்டு இப்படித்தான் சிங்காரித்துக் கொள்ளுவார்கள்.

★ ஒரு நத்தை தன் எடையைப் போல அறுபது மடங்குள்ள பொருளை இழுக்கவும் பத்து மடங்குள்ள பொருளைத் தூக்கவும் கூடியது.



★ பல்லக்குப் பஸ் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? கீழே உள்ளதுதான் அது. ஆள் சுமக்கும் ஆசனங்களைக் கொண்ட பல்லக்குகள் புராதன சீனாவில் 1914ம் ஆண்டு வரை பழக்கத்தில் இருந்தன. ஒரு குடும்பமே—ஒரு டஜன் நபர்கள் வரை — இம்மாதிரிப் பல்லக்குகளில் பயணம் செய்வார்களாம்.



டெலிபோன் தன்னை உருவாக்கியவரின் வரலாற்றை ரமணிக்கும் உஷாவுக்கும் சொல்ல ஆரம்பித்தது.



தொலைபேசியைத் தோற்றுவித்தவர்

"விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ள எத்தனையோ அரிய பொருள்களில் மனித வர்க்கத்துக்குப் பயன்தரக் கூடியவைகளில் டெலிபோனாகிய நான் முதன்மை ஸ்தானம் வகிக்கிறேன். பிறவிச் செவிட்டு ஊமைகளுக்குப் பிறர் பேசுவதைப் புரிந்து கொள்ளுவது எப்படி என்பதைப் போதிக்கும் ஓர் ஆசிரியர்தான் என்னை உருவாக்கி உலகுக்கு அளித்தவர். ஊமைச் செவிடர்களுக்கு ஒலியை உணர்த்துவது எப்படி என்பதில் ஆராய்ச்சிகள் நடத்திக் கொண்டிருந்த போதுதான் தற்செயலாக நான் பிறந்தேன்.

"1847ம் வருஷம் மார்ச்சு மாதம் 3ந் தேதி எடின்பர்க் நகரில் ஒரு குழந்தை பிறந்தது. குழந்தையின் தந்தையும் பெரிய அறிவாளி. பிறவிச் செவிட்டு ஊமைக் குழந்தைகளுக்கு உதட்டசைவின் மூலம் விஷயங்களை விளக்குவது எப்படி என்று ஒரு புத்தகம் எழுதிப் புகழ் பெற்றவர். 'அலெக்ஸாண்டர்—மெல்வில்லி பெல்' என்பது அவர் பெயர். இவர் மகனான **அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல்லும்** சிறு வயதிலேயே ரொம்பச் சூடிகையுள்ளவராக விளங்கினார். ஒரு சமயம் எடின்பர்க் நகரில் உள்ள மாவு மில்லுக்குச் சக மாணவர்களுடன் குழந்தை கிரஹாம் பெல் போனார். ஒவ்வொருவரிடமும் சிறிது கோதுமையைக் கொடுத்து அதன் மேல் உள்ள தோலை (உமியை) நீக்கிக் கொண்டு வருமாறு கட்டளையிடப்பட்டது.

"கிரஹாம்பெல் கோதுமையுடன் வீட்டுக்குச் சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் தமக்கிட்ட வேலையை முடித்துக் கொண்டு வந்து கொடுத்தார். மற்றப் பையன்கள் வெகுநேரம் கழித்துத்தான் தோல் நீக்கிய கோதுமையுடன் வந்தார்கள். அதுவும் சரியாக இல்லை. பெல்லினால் எப்படி அத்தனை சீக்கிரத்தில் அவ்வளவு சுத்தமாக அந்த வேலையைச் செய்ய முடிந்தது என்பதை ஆலை முதலாளி விசாரித்தபோது கிரஹாம் பெல்; கைநகங்களை ராவிச் சீராக்கும் நெயில் பிரஷ்ஷை உபயோகித்துக் கோதுமையின் தோலை அகற்றியதாகச் சொன்னார். சிறுவன் கிரஹாம் பெல் கையாண்ட பிரஷ் முறையை அபிவிருத்தி செய்து கோதுமையின் தோலை நீக்குவதற்கு ஆலை முதலாளி, ஒரு யந்திரமே தயாரித்து விட்டார். இப்படிக் குழந்தைப் பருவத்திலேயே கிரஹாம்பெல்லின் ஆராய்ச்சித் திறன் வெளிப்படலாயிற்று.





"ஒரு சமயம் பெல்லின் தகப்பனார் தம் மகனிடம் விளையாட்டாக, 'ஒரு பேசும் யந்திரத்தை உருவாக்கு, பார்க்கலாம்' என்றார்.

"பெல்லும் அவர் தம்பியும் ஒரு மண்டையோட்டை எடுத்தார்கள். அதற்கு நாக்கு வைத்தார்கள். செயற்கைத் தொண்டையைப் பொருத்தினார்கள். துருத்தியை நுரையீரலாக்கினார்கள். அது பேசிற்று! எப்படி? 'மாம்மா' என்று ஒலி எழும்பியது. அடுத்தடுத்து அந்த மண்டை ஓட்டு மாய மனிதனை 'ம்மா, ம்மா' என்று கத்த வைத்துக் கொண்டிருந்தார்கள் சிறுவர்கள். அந்த வயதில் அது அவர்களுக்கு வேடிக்கைதானே? இவர்கள் குடியிருந்தது மாடியில். கீழே இருந்த குடித்தனக்கார அம்மாள், 'அந்தக் குழந்தையை அழாமல் வைத்துக்கொள்ளக் கூடாதா? தலைவேதனையாக இருக்கிறதே!' என்று கூச்சல் போட்டாள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

"ஆனால் இந்த வெற்றியினாலெல்லாம் பெல் திருப்தி அடைந்துவிடவில்லை. இருபத்தோராவது வயதில் லண்டனுக்கு வந்தவர் ஜெர்மன் விஞ்ஞானி ஹெல்ம்ஹோல்ஸ் என்பவர் எழுதிய ஒரு புத்தகத்தைப் படித்தார். சலனத்துக்குள்ளாக்கப்பட்ட, சாப்பாட்டுக்கு உதவும் முள் கரண்டிகள் மின்சாரக் காந்தங்களால் மனிதக் குரல்போல் ஒலி எழுப்புவதைப் பற்றி விவரிக்கப்பட்டிருந்தது அதில்.

இவருடைய கண்டுபிடிப்புக்கு இந்தக் கருத்தும் துணை செய்தது.



''பெல் உயர்ந்த படிப்புக்களெல்லாம் படித்தார். இருபத்து மூன்றுவது வயதிலே பெல்லின் உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டது. லண்டனின் மூடு பனி அவருக்கு ஏற்கவில்லை. இதனால் கவலை கொண்ட அவரது பெற்றோர்கள் ஆரோக்கியத்துக்காகத் தாய்நாட்டை விட்டுக் கானடாவுக்குக் குடியேறினார்கள். அங்கிருந்து அமெரிக்காவுக்குப் போனார் பெல். போஸ்டன் சர்வகலாசாலையில் பேராசிரியரானார். இங்குதான் கிரஹாம் பெல் தம்முடைய அற்புதமான ஆராய்ச்சியை ஆரம்பித்தார்.

''போஸ்டன் நகரிலே செவிடர் ஊமையர்களுக்கு ஒலியை உணர்த்தும் பயிற்சிப் பள்ளி ஒன்றை நிறுவி அதில் ஆராய்ச்சிகள் செய்ய அழைக்கப்பட்டார். மேபெல் ஹாப்பார்டு என்ற ஒரு பிறவிச் செவிட்டுப் பெண்ணின்மீது இவர் மிக்க அன்பு கொண்டு அவள் செவிட்டுத் தன்மையை நீக்க, ஒலிகளை அவள் உணருவதற்கான ஒரு சாதனத்தைத் தயாரிப்பதில் முனைந்திருக்கும் போதுதான் எதிர்பாராதவிதமாக நான் உருவானேன். பிற்காலத்தில் இந்தப் பெண்ணையே பெல் கல்யாணம் செய்து கொண்டார். சவக் கிடங்கிலிருந்து இறந்த ஒருவரின் காதை எடுத்துப் போய் ஆராய்ச்சிகள் நடத்தினார். செயற்கைக் காது தயாரிக்க முடியுமா? செவிடர்களுக்கு வாழ்வளிக்க முடியுமா என்ற ஒரே சிந்தனை.

''இரவு பகல் பாராமல் சதா இதே சிந்தனையாக என்னை உருவாக்குவதில் ஈடுபடலானார். இதற்கு இவருக்கு உதவியாக இருந்தவர் வாட்ஸன் என்பவர். போஸ்டன் நகரில் சாதாரண அறையொன்றில் இருவரும் கம்பி மூலம் ஒலியை வேறொரு இடத்துக்கு அனுப்பும் முயற்சியைத் தொடர்ந்து செய்து வந்தார்கள்.



''1876ம் ஆண்டு மார்ச் 10ந் தேதி வாட்ஸன், தங்கி இருந்த வீட்டின் கீழ்த் தளத்தில் ரிஸீவரைத் தன் காதோடு வைத்து அழுத்திக்கொண்டு தாளமிடும் உள்ளத்தோடு காத்திருந்தார். அதே கட்டடத்தின் மாடி அறை ஒன்றில் பெல் தம் யந்திரத்தின் முன்னால் உட்கார்ந்து கடைசியாக அதில் சில மாற்றங்களைச் செய்து கொண்டிருந்தார். பல மணி நேரங்கள் பாடுபட்டார். எதிர்பார்த்தபடி அந்த யந்திரம் வேலை செய்யவில்லை. அலுப்பு. ஆனால் மனம் தளரவில்லை பெல். அப்போது அவரது கை தவறுதலாக ஓர் அமில பாட்டிலைக் கவிழ்த்து விட அது அவர் உடையில் கொட்டி நாசமாக்கிவிட்டது. இதனால் கசப்படைந்த பெல், ''மிஸ்டர் வாட்ஸன்! கம் ஹியர் – ஐ வாண்ட் யூ !'' என்று கத்தினார். ''வாட்ஸன்! இங்கே வாருங்கள். நீங்கள் இங்கு தேவைப்படுகிறீர்கள்'' என்று.

''பெல் கூப்பிட்டது டிரான்ஸ்மிஷன் யந்திரத்துக்கு முன்னால். ஆகவே, எதற்காக அத்தனை நாட்களாகக் காத்திருந்தார்களோ அது நடந்துவிட்டது.

''கீழே உள்ள வாட்ஸனின் காதில் அவை துல்லியமாகக் கேட்டன. அவர் முகம் மலர்ந்தது. உடல் சிலிர்த்தது. தம் நண்பரின் குரலை – தெளிவான அவரது பேச்சை – அவர் குழல் மூலம் கேட்டார்.

'' மிஸ்டர் வாட்ஸன், மேலே வாருங்கள்''–இந்த வார்த்தைகள்தாம் முதன் முதலாக என் மூலம் பேசப்பட்ட வார்த்தைகள். வாட்ஸன் உத்ஸாகத்தினால் துள்ளிக் குதித்தார். பட்ட கஷ்டத்துக்குப் பலன் கிடைத்தால் யாருக்குத்தான் சந்தோஷம் வராது. பள்ளிப் பையனைப் போல் மாடிப் படிகளை இரண்டு மூன்றாகத் தாவி ஏறி பெல் இருக்கும் அறைக்குள் புகுந்தார்.

''உங்கள் குரலை நான் கேட்டேன். நீங்கள் சொன்ன செய்தியை என்னால் கேட்க முடிந்தது'' என்று கத்திக் கொண்டே கிரஹாம் பெல்லைக் கட்டிக் கொண்டு ஆனந்தக் கூத்தாடினார் வாட்ஸன். புதிதாகப் பிறந்த குழந்தையைப் பார்த்து ஆனந்திக்கும் பெற்றோர்களைப் போல் இருவரும் என்னைச் சுற்றி வந்து குதூகலப்பட்டார்கள். அவர்கள் முகத்தில்தான் எத்தனை ஆனந்தம் தெரியுமா ?

''இத்தகைய மகத்தானதொரு சாதனத்தைக் கண்டு பிடித்தவருக்கு உடனே பொருளும் புகழும் வந்து குவியும் என்று தானே நினைப்பீர்கள். அதுதான் இல்லை. என்னால் முதலில் அவருக்குப் பொருள் சேரவில்லை. என்னைப் பற்றி அவர் செய்த விளக்கப் பிரசங்கங்கள்தாம் வாழ்வுக்கு வருவாயைத் தந்தன.

''கிரஹாம்பெல் என்னைப் பற்றி – தான் கண்டு பிடித்துள்ள புதிய சாதனத்தைப் பற்றி – தொலைதூரத்தில் உள்ளவர்களுடன் கம்பி மூலம் பேசலாம் என்பதைப் பற்றிச் சொன்னபோது யாருமே அவர் வார்த்தையை நம்பவில்லை. பித்துக்குளி உளறுகிறான் என்றுதான் பரிகாசம் செய்தார்கள்.

ஆனால் பெல் இதனையெல்லாம் மனம் தளரவில்லை. பிலடெல்பியாவில் என்னைப் பேச வைத்து என் பெருமையை நிலைநாட்டினார். பிரேஸில் நாட்டு மன்னர் டான் பெட்ரோ ரிஸீவரை எடுத்துக் காதில் வைத்துக் கொண்டார். மறு



முனையிலுள்ள பெல் ஷேக்ஸ்பியரின் ஹாம்லெட் என்ற நாடகத்திலிருந்து அற்புதமான வாசகமொன்றைப் பேசினார். மன்னர் பெட்ரோ துள்ளிக் குதித்தார். ''என்ன ஆச்சரியம்! இது பேசுகிறது. இந்தக் குழலில் கிரஹாம் பெல்லின் குரல் கேட்கிறதே'' என்றார்.

''விக்டோரியா மகாராணியின் முன்னிலையில் என்னை இயக்கிக் காட்டினார். இதற்குள் பெல்லின் கண்டு பிடிப்பைக் காப்பி அடித்து வேறு பலர் இதேபோல் செய்ய முற்பட்டு விட்டார்கள். 'பேடண்ட்' உரிமைக்காகப் போராட வேண்டி இருந்தது. படாத பாடுபட்டு என்னை உருவாக்கியதோடு அதை மக்களுக்கு உபயோகமுள்ளதாகச் செய்யவும் சிரமப்படவேண்டி இருந்தது. அவர் பட்ட பாடு வீண் போகவில்லை.

''இன்று உலகெங்கிலும் நான் வியாபித்திருக்கிறேன். ஒவ்வோர் ஆபீஸ் மேஜையிலும் வீட்டிலும் நான் காட்சி அளிக்கிறேன்.''

''டெலிபோன் வைத்திருப்போரெல்லாம் அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல்லின் சேவைக்குத் தங்கள் வீட்டில் அவருக்கு ஞாபகச் சின்னம் எழுப்பி இருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்'' என்றான் ரமணி.

'' சரியாகச் சொன்னாய். கிரஹாம் பெல் இதைத் தவிர இன்னும் பல ஆராய்ச்சிகளைச் செய்தார். ஆனால் அவை எல்லாவற்றிலும் தலை சிறந்தது என்னைக் கண்டு பிடித்ததுதான். பேடண்ட் உரிமை பெற்ற பிறகு 'பெல் டெலிபோன் கம்பெனியை' நிறுவியதும் எத்தனை பேர்கள் தங்களுக்கு ஃபோன் வேண்டும் என்று மனுச் செய்து கொண்டார்கள் தெரியுமா? எட்டே எட்டுப் பேர்கள்! ஆனால் இன்றைக்கு டெலிபோன் வேண்டும் என்று பணம் கட்டிவிட்டுக் காத்திருப்பவர்கள் ஒவ்வொரு நகரத்திலும் ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள். அது போகட்டும், இன்னோர் அதிசயம் தெரியுமா? டெலிபோனைக் கண்டு பிடித்த கிரஹாம் பெல்லிற்கு டெலிபோனைக் கண்டாலே பிடிக்காது. பிற்காலத்தில் தமது கிராமத்து வீட்டில் ஓய்வுபெற்று ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும்போது தன்னை யாரும் கூப்பிட்டுத் தொல்லை தரக் கூடாதென்று டெலிபோன் மணிக்கு இடையே காகிதத்தை மடித்து வைத்துப் பிறர் கூப்பிடுவதை என்னால் அறிவிக்க முடியாதபடி செய்துவிடுவார்.'' பேசிக் கொண்டிருந்த டெலிபோன் இடையிடையே ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்த உஷாவையே கவனித்துக் கொண்டிருந்தது. தன் பேச்சைக் கவனிக்காமல் அப்படி அவள் எதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறாள் என்பதை அது புரிந்துகொண்டும் விட்டது.

''உஷா, நீ என்ன யோசிக்கிறாய் என்பது தெரியும். சொல்லட்டுமா? நமக்குத் தெரிந்து எத்தனையோ வீடுகளில் டெலிபோன் இருக்கிறதே. அந்த டெலிபோன்களை யெல்லாம் ஒன்றுக்கொன்று கம்பி மூலம் இணைப்பதானால் ஆகாயத்தையே பார்க்க முடியாமல் ஒரே கம்பி வலைப் பின்னலாக அல்லவா இருக்கும் என்றுதானே சிந்திக்கிறாய், இல்லையா?'' என்று கேட்டது.





''ஆமாம், அதுவேதான். பெரிய நகரங்களில் ஆயிரக்கணக்கில் டெலிபோன்களிருக்குமே. ஒவ்வொரு தொழில் ஸ்தாபனமும் பல பேருடன் தொடர்பு கொள்ள வேண்டி இருக்கும். பெரிய மனிதர்களுக்கு ஏராளமான நண்பர்கள் இருப்பார்கள். அவர்களுடைய டெலிபோனை எல்லாம் ஒன்றோடு ஒன்று இணைப்பதானால்......'' என்று குழம்பினாள் உஷா.

''நியாயமான சந்தேகம்தான்.... ஆனால் என்னை இப்போது எஞ்சினீயர்கள் எத்தனையோ முன்னேற்றம் அடையச் செய்துவிட்டார்கள். பிறந்த குழந்தை பிறந்தபடியேவா இருக்கிறது? வளர்ந்து பெரியவனாகிக் கல்வி கேள்விகளில் சிறந்தவனாக விளங்குவதில்லையா? அதே போல்தான் என் விஷயமும். பெல் கண்டு பிடித்த அன்றைய டெலிபோனில் பிற்கால விஞ்ஞானிகள் எத்தனையோ மாற்றங்களைச் செய்து என்னைப் பண்படுத்தி அபிவிருத்தி செய்துவிட்டார்கள்.

''டெலிபோனில் ஆரம்பக் காலத்தில் இரும்புக் கம்பியைத்தான் ஒயராக உபயோகித்தார்கள். பின்னால் இரும்பை விடத் தாமிரக் கம்பிகளை உபயோகிப்பதினால் பலன் இருப்பதை அறிந்து அதையே உபயோகிக்கலானார்கள் எஞ்சினீயர்கள் இந்தத் தாமிரக் கம்பியின் பருமனைக் குறைப்பதில் மேலும் மேலும் ஆராய்ச்சிகள் செய்து வெற்றி கண்டார்கள்.

''இப்போது உள்ள டெலிபோன் கேபிள், தன் நான்கு அங்குலச் சுற்றளவுக்குள் 4000 கம்பிகளை (ஒவ்வொன்றும் காகித நாடாவினால் சுற்றப்பட்டது) அடக்கிக் கொண்டிருக்கிறது என்றால் பாருங்களேன். பெரிய நகரங்களில் டெலிபோன் கம்பிகள் குறுக்கும் நெடுக்கும் வலை பின்னினாற்போல் இருந்தால் பார்க்கவும் விகாரம். அதனால் அபாயமும்கூட. ஆகவே, கேபிள்கள் என்று சொல்லப்படும் இந்த டெலிபோன் கம்பிகளை பூமிக்கு அடியில் கொண்டு செல்லுகிறார்கள்.

''நீ யாருடனாவது பேச வேண்டுமானால் என்ன செய்கிறாய்? டெலிபோனைக் கையில் எடுத்து ஒரு நம்பரைக் குறிப்பிட்டுக் கேட்கிறாய். சில விநாடிகளில் நீ யாருடன் பேச விரும்பினாயோ அவர் உன் காதிலே 'ஹலோ!' என்று குரல் கொடுக்கிறார். அத்தனை சீக்கிரத்தில் அவர் வீட்டோடு உனக்கு எப்படித் தொடர்பு ஏற்பட்டது?

''உன் வீட்டிலிருந்து செல்லும் டெலிபோன் ஒயர் 'எக்ஸ்சேஞ்ஜ்'என்று சொல்லப்படும் ஒரு கட்டடத்துக்குப் போய் முடிகிறது. அதே போல் இந்த ஊரில் டெலிபோன் வைத்திருப்போரின் வீட்டு ஒயர்களெல்லாம் இந்த 'எக்ஸ்சேஞ்ஜ்' கட்டடத்துக்கு வந்து முடியும். பெரிய நகரங்களில் இதுபோன்ற எக்ஸ்சேஞ்ஜ்' ஆபீஸ்கள் பல இருக்கும்.

''நீ டெலிபோனைக் கையில் எடுத்ததும் எக்ஸ்சேஞ்ஜ் ஆபீஸில் உள்ளபோர்டில் ஒரு விளக்கு எரியும். யாரோ யாருடனோ பேச விரும்புகிறார்கள் என்பதை அறிவிக்கும் சைகைதான் இந்த விளக்கு எரிவது. உடனே அவர் உன்னோடு தொடர்பு கொள்கிறார். நீயும் ஒரு நம்பரைக் குறிப்பிடுகிறாய். ஆபரேட்டர் உடனே உன்னுடைய டெலிபோன் ஒயரை நீ யாருடன் பேச விரும்புகிறாயோ அந்த வீட்டுக்காரரின் டெலிபோன் ஒயரோடு இணைத்துவிடுவார். இப்போது உங்கள் இருவருக்கும் நேரடியாகத் தொடர்பு ஏற்பட்டுவிடும். ஒவ்வொரு வீட்டு டெலிபோனுக்கும் ஒரு குறி எண் கொடுக்கப்பட்டிருப்பதால் எக்ஸ்சேஞ்ஜ் ஆபீஸில் உள்ளவர்களுக்கு நீ யாருடன் பேச விரும்பினாலும் அவர்கள் டெலிபோன் இலக்கத்தைக் கேட்டு 'டக்'கென்று 'கனெக்ட்' செய்து விடுவதற்குச் சௌகரியமாக இருக்கிறது.''

''சில சமயம் என் அப்பா 'டிரங்கில்' பேசினேன்' என்கிறாரே, அப்படி என்றால் என்ன?'' என்று கேட்டான் ரமணி.

''இப்போது நான் சொன்னது ஒரே நகரத்தில் உள்ள அதாவது உன்னூரில் உள்ள உன் நண்பர்களோடு பேசும் விதத்தைப் பற்றி. இந்த நகரத்திலிருந்து வேறொரு நகரத்தில் உள்ள ஒருவரோடு பேசும் முறைக்கு 'டிரங்க் போனி'ல் பேசுவது என்று பெயர். இந்த ஊரில் உள்ள எக்ஸ்சேஞ்ஜ் ஆபீஸில் உள்ளவர்கள் உன் டெலிபோன் ஒயரை அடுத்த நகரத்தில் உள்ள இதே போன்ற எக்ஸ்சேஞ்ஜ் ஆபீசோடு இணைத்துவிடுவார்கள், அந்த ஊர் எக்ஸ்சேஞ்ஜ் ஆபீஸுக்கு நீ பேச விரும்பிய நபரின் டெலிபோன் ஒயரோடு தொடர்பு இருக்கும். அத்துடன் இந்த ஊரிலிருந்து தொடர்பு கொண்ட உன் டெலிபோன் ஒயரை இணைத்துவிடுவார்கள். இப்படி இரண்டு ஊரில் உள்ள எக்ஸ்சேஞ்ஜ் ஆபீஸ்களின் உதவியால் பேசும் முறைக்கு 'டிரங்க்ஸ்' என்று பெயர்'' விஸ்தாரமாக விளக்கியது டெலிபோன்.

''ரொம்ப சுவாரஸ்யமாக இருக்கிறதே! அது சரி, எங்க பெரியப்பா

லண்டனில் இருக்கிறார். அதுதான் உனக்குத் தெரியுமே. போன வாரம் அவருடன் டெலிபோனில் எங்கப்பா பேசினாரே, அது எப்படி? சென்னைக்கும் லண்டனுக்கும் இடையே எத்தனை மைல்கள், எத்தனை ஊர்கள், ஒவ்வோர் ஊர் எக்ஸ்சேஞ்சுடனும் தொடர்பு கொண்டு....'' என்று இழுத்தான் ரமணி.

''ஊருக்கு ஊர் பேசுவதற்கு 'டிரங்க் போன்' என்று பெயர். தேசத்துக்குத் தேசம் பேசும் முறைக்கு 'லாங் — டிஸ்டன்ஸ் கால்' அதாவது மிக மிகத் தொலைவிலுள்ளவர்களோடு தொடர்பு கொள்ளுதல் என்று பெயர். ஒரு தேசத்தோடு இன்னொரு தேசத்தைக் கம்பியால் இணைக்க முடியுமா? இடையே கடல், காடு, மலை இவை இருக்குமே! ஆகவே, உன் பேச்சை ஒலி அனுப்பு நிலையம் மூலம் (ரேடியோ டிரான்ஸ்மிட்டிங் ஸ்டேஷன்) அனுப்புவார்கள். அடுத்த நாட்டில் உள்ள ஒலி கிரகிப்பு நிலையத்தில் (ரேடியோ ரிஸீவிங் ஸ்டேஷன்) அந்த ஒலி அலையைக் கிரகித்து வெளிநாட்டு டெலிபோன் எக்ஸ்சேஞ்ஜ் ஆபீஸில் வாங்கி அதை லண்டனில் உள்ள உன் பெரியப்பாவின் வீட்டு டெலிபோனுடன் இணைத்து விடுவார்கள்.''

ரமணியும் உஷாவும் வியப்புடன், ''உன்னைப் பற்றி நீ சொன்ன ஒவ்வொரு விஷயமும் எங்களுக்கு ரொம்ப அதிசயமாக, பயனுள்ளதாக இருந்தது'' என்று குதூகலப்பட்டார்கள்.

''அது சரி, யாரோ என்னோடு பேச விரும்புகிறார்கள் என்பதை அறிவிக்க மணி அடித்துக் கூப்பிடுகிறாய். நான் அவர்களுடன் பேச ரிஸீவரைக் கையில் எடுத்ததும் மணி அடிப்பது நின்றுவிடுகிறதே, அது எப்படி?'' என்றாள் எதையும் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்பும் உஷா.

''உஷா, நீ ரொம்பக் கெட்டிக்காரி! மணியைப் பற்றி மணியான கேள்வியே கேட்டுவிட்டாய். நான் என் படுக்கையில் சயனித்துக் கொண்டிருக்கும்போது என்னுள் ஓடிக் கொண்டிருக்கும் மின்சாரம் உள்ளே இருக்கும் மணியை அடிக்கும்படி செய்கிறது. குழலை என் மீதிருந்து நீ எடுத்ததும் மணியை அடிக்கத் தேவையான மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. அதனால்தான் மணி அடிப்பது நின்று விடுகிறது. அந்த மின்சாரம் என் தொண்டையிலும் காதிலும் பாய்ந்து நீ உன் நண்பருடன் பேசுவதற்குப் பயன்படுகிறது. ம்... இன்னும் ஏதாவது சந்தேகங்கள் உண்டானால் கேட்டுவிடுங்கள். எனக்கு நேரமாகிறது'' என்றது முகத்தில் துளித்திருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டே டெலிபோன்.

''ஆமாம், உன் வயிற்றிலே வட்டமாக ஒரு தட்டும் அதில் பூஜ்யத்திலிருந்து ஒன்பது வரை இலக்கங்களும் போடப்பட்டிருக்கிறதே, அது என்ன?'' என்று கேட்டாள் உஷா.

''ஓ, அதைச் சொல்கிறாயா? அதற்கு டயல் டெலிபோன் என்று பெயர். உன் வீட்டில் உள்ள என்னிடம் நீ பேச வேண்டிய நம்பரைச் சொல்லுகிறாய். எக்ஸ்சேஞ்ஜ் நிலையத்தில் உள்ள ஆபரேட்டர் அதைக் கேட்டு அவருடன் உனக்குத் தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கிறார். டயல் டெலிபோனில் எக்ஸ்சேஞ்ஜிலுள்ள ஆபரேட்டரோடு நீ பேசவே வேண்டாம். குழலைக் கையில் எடுத்துக் கொண்டு பேச வேண்டிய நபரின் நம்பரை ஒவ்வொன்றாக விரலால் அழுத்திச் சுற்றினால் போதும். எக்ஸ்சேஞ்ஜ் ஆபீஸில் தானாகவே உனக்குப் பேச வேண்டியவருடன் தொடர்பு ஏற்பட்டுவிடும். இது டயல் முறையின் முன்னேற்றம்.

''எனக்கு நேரமாகிறது. கடைசியாக உனக்கு என்னைப் பற்றிச் சில வியக்கத்தக்க புள்ளி விவரங்களைக் கொடுத்துவிட்டுப் போகிறேன். ஐக்கிய அமெரிக்காவில் ஒரு நாளைக்கு டெலிபோன் மூலம் எத்தனை அழைப்புக்கள் தெரியுமா வருகின்றன? 95,000,000 அழைப்புக்கள். இந்த நாட்டில் உள்ள மொத்த டெலிபோன்கள் 20,000000 ஐக்கிய அமெரிக்காவில் 100,000,000 மைல்கள் நீளம் உள்ள டெலிபோன் ஒயர்கள் (கேபிள்கள்) போடப்பட்டிருக்கின்றன. அத்தனையும் பூமிக்கடியில்.



'' அது சரி, டெலிபோன் என்று எனக்கு ஏன் பெயர் வந்தது தெரியுமா? தெரியாதில்லையா? கிரேக்க மொழியிலிருந்து வந்த பெயர் இது. தூரத்திலுள்ளவருடன் பேசுவதற்கு அம்மொழியில் டெலிபோன் என்று பெயராம்.''

பேசிக் கொண்டிருக்கும் போதே டெலிபோனின் குரல் கரகரத்தது. ரமணி சட்டென்று அதை எடுத்து அதன் பீடத்தில் பொருத்தினான்..... 'டிரிணிங் டிரிணிணிங்' என்று மணி கிணுகிணுத்தது.

ரிஸீவரைக் கையில் எடுத்துக் காதிலே வைத்துக் கொண்டு பேசலானான் ரமணி. உஷாவோ டெலிபோன் சொன்ன கதையிலே வியப்படைந்து சிந்தனையில் ஆழ்ந்து போனாள்.

—கிருஷ்ணவேணி

பல்கேரியா தேசத்தில் வெகு காலத்துக்கு முன்பு மூன்று சகோதரர்கள் வசித்து வந்தனர். ஏழைகளான அவர்கள் பணம் சம்பாதிக்கும்பொருட்டு வெளிநாட்டுக்குச் செல்லத் தீர்மானித்து வீட்டை விட்டுப் புறப்பட்டனர்—தந்தையின் ஆசியைப் பெற்று. சில மைல்கள் சென்றதும் ஓர் இடத்தில் பாதை மூன்றாகப் பிரிந்திருந்தது.

எல்லோரிலும் மூத்தவனானவன் தன் தம்பிகளைப் பார்த்து, ''தம்பிகளா! நாம் மூவரும் ஒரே பாதையில் செல்வதைக் காட்டிலும் தனித் தனியே செல்வோம். நான் வலது பக்கத்துப் பாதையில் செல்கிறேன். உங்களில் ஒருவன் இடது பக்கமும், மற்றவன் மத்தியில் உள்ள பாதையிலும் செல்லுங்கள். மூன்று வருடங்களுக்குப் பிறகு நாமெல்லோரும் இதே இடத்தில் கூடுவோம்'' என்றான்.

''அப்படியே ஆகட்டும். யார் யார் எவ்வளவு சம்பாதிக்கிறோமென்று பார்ப்போமே?'' என்றனர் சகோதரர்கள். மூவரும் தத்தம் பாதையில் பிரிந்து சென்றார்கள்.

மூத்தவன் ஒரு பெரிய பட்டணத்தை அடைந்தான். தன்னிடம் உள்ள சிறு தொகையில் லேவாதேவி ஆரம்பித்தான். மூன்று வருஷங்களுக்குள் ஒரு பை நிறையத் தங்க நாணயங்களைச் சேர்த்து விட்டான்.

இரண்டாமவன் பெரிய நகரமொன்றில் கடை ஒன்றைத் திறந்தான். மூன்று வருடங்களில் அவனுக்கும் ஒரு பை நிறையத் தங்கக் காசுகள் சேர்ந்து விட்டன.

மூன்றாமவன் ஒரு கிழவனிடம் வேலைக்கு அமர்ந்தான். கிழவனிடமிருந்த ஆடுகளை மேய்ப்பதுதான் அவன் வேலை. மூன்று வருடங்கள் சென்றதும் அவன் கிழவனிடம் சென்று, ''ஐயா! எனக்குச் சேரவேண்டிய மூன்று வருடச் சம்பளத்தைக் கொடுத்தால் நன்றியுள்ளவனாக இருப்பேன்'' என்று கேட்டான் பணிவாக.

பெட்டியிலிருந்து கை நிறையப் பணத்தை எடுத்து அவனிடம் கொடுத்



தான் கிழவன். பிறகு தன் கைப் பையிலிருந்து மூன்று சீதாப் பழங்களை எடுத்து அவன் முன்னால் வைத்தான். ''குழந்தாய்! நானே கிழவனாகி விட்டேன். நீ என் ஆடுகளை மிகுந்த சிரத்தையுடனும், அன்புடனும் பேணி வந்தாய். உன்னைப் போன்ற நல்ல பையன் எனக்கு இனி எப்படிக் கிடைப்பான்? உன் உழைப்புக்குப் பிரதிபலனாக இத்தொகையைப் பெற்றுக் கொள். ஆனால் பணத்தை நான் பிரியப்பட்டுக் கொடுக்கவில்லை. ஏனென்றால் பணம் சாசுவதமில்லை. ஒரு கையில் பணம் வரும், மற்றொரு கையில் போகும். எனவே, என் மனசார உனக்குப் பணம் கொடுப்பதை நான் விரும்பவில்லை. ஆனால் இந்தச் சீதாப் பழங்களை நான் மனப்பூர்வமான பிரியத்துடனும், ஆசியுடனும் கொடுக்கிறேன். பணமா? பழமா? இவற்றில் உனக்கு எது வேண்டும் கேள்!'' என்று கேட்டான் கிழவன்.

இளைய சகோதரன் சிறிது யோசித்தான். ''தாத்தா! நான் சீதாப் பழங்களையே எடுத்துக் கொள்கிறேன். நிர்மலமான மனத்துடன் கொடுக்கும் பொருளையே நான் விரும்புகிறேன்'' என்று சொல்லிக் கிழவனை வணங்கி மூன்று பழங்களுடன் புறப்பட்டான்.

மூன்று சகோதரர்களும் தாம் முன்பு பிரிந்த இடத்தை அடைந்தனர். ஒருவருக்கொருவர் யோகக்ஷேமங்களை விசாரித்துக் கொண்ட பிறகு அவரவர் தேடிய பொருளைப் பற்றிய பேச்சு எழுந்தது.

முதல் இரண்டு சகோதரர்களும் தத்தம் பைகளைக் கீழே உதற அவற்றிலிருந்து தங்க நாணயங்கள் கலகலவென்று குவிந்தன.

''தம்பீ! நீ சம்பாதித்தது எவ்வளவு?'' என்று கேட்டனர் மூத்த சகோதரர்கள், மிக்க ஆவலுடன்.


இளைய சகோதரன் அவர்களின் முன் மூன்று சீதாப் பழங்களை வைத்து 'இது தான்' என்றான்.

''என்ன இது! மூன்று வருடங்கள் கஷ்டப்பட்டு உழைத்ததற்குக் கூலி இதுதானா?''

''ஆமாம், அண்ணா! ஆனால் அந்தக் கிழவர் இதய பூர்வமாக இவற்றை எனக்குக் கொடுத்திருக்கிறார். பெற்ற மகனை விட அதிகமான அன்பைச் சொரிந்தார் என்னிடம்.''

மூத்த சகோதரர்கள் இருவருக்கும் அவன்மீது ஏகக் கோபம் உண்டாயிற்று. ''சரியான மூட்டாள் நீ. மூன்று வருடங்கள் நெற்றி வியர்வை சிந்தப் பாடு பட்டுவிட்டுக் கேவலம் மூன்று சீதாப் பழங்களைக் கொண்டு வந்திருக்கிறாயே? வெட்கமாக இல்லை? போ, உடனே அந்தக் கிழவரிடம் போய்ப் பணத்தைக் கேட்டு வாங்கி வா!'' என்று திட்டி அனுப்பினர்.

அது வெயில் காலம். நடு மதியம் வேறு. கொஞ்ச தூரம் நடந்ததுமே இளையவனுக்குத் தாகம் எடுக்க ஆரம்பித்தது. அங்குள்ள கிணற்றின் அருகே சென்று நீர் குடித்தான். இன்னும் நடந்தான். வயிறு 'கர்...ர்...புர்...ர்' றென்று சத்தமிடத் தொடங்கியது. 'இங்கு எங்கேயாவது உட்கார்ந்து ஒரு பழத்தைச் சாப்பிடுவோம்' என்று நினைத்தான். ஒரு மரத்தின் நிழலில் அமர்ந்து சட்டைப் பையிலிருந்து ஒரு பழத்தை எடுத்தான். சாப்பிடலாமென்று பழத்தை வெட்ட எண்ணினான்.



என்ன ஆச்சரியம்! நிமிஷத்துக்கு நிமிஷம் பழம் பெரிதாகிக் கொண்டே வந்தது. கடைசியில் ஒரு மிகப் பெரிய பானை அளவுக்கு வளர்ந்து படீர் என்று வெடித்தது. அதிலிருந்து ஒவ்வொன்றாக ஆடுகள் வெளியே வரலாயின. அப்பா! எத்தனை ஆடுகள்! ஒன்றல்ல இரண்டல்ல, ஆயிரமாயிரம் ஆடுகள். அத்தனையும் வெள்ளை ஆடுகளே! அவைகளின் கழுத்தில் கட்டிய சலங்கைகள் 'கலீர் கலீர்' என்று ஓசையை எழுப்பின.

இளைய சகோதரனுக்குப் பேரானந்தம் ஏற்பட்டது. அந்த ஆடுகளை ஓட்டிக்கொண்டு தன் தந்தையின் இருப்பிடத்தை நோக்கிப் புறப்பட்டான். சிறிது தூரம் நடந்தான். 'மற்றொரு பழத்தை வெட்டிப் பார்த்தால் என்ன? அதில் என்ன இருக்குமோ?' என்று நினைத்தவனாகப் பழத்தைக் கையில் எடுத்து வெட்டப் போனான். அதுவும் முதல் பழத்தைப் போலவே பெரிதாக வளர்ந்தது. பானை அளவுக்குப் பருமனாகிப் பிளந்தது. அதிலிருந்து அழகான இரண்டு காளை மாடுகள் பூட்டப்பட்ட நேர்த்தியான ஒரு வண்டி வெளியே வந்து நின்றது. அதைப் பார்த்த இளையவன் தன் மூக்கின் மீது கைவைத்து மலைத்து நின்று விட்டான்.

காளைகளின் 'அம்மா' என்ற சத்தம் அவனை தன் நிலைக்குக் கொண்டு வந்தது. உடனே வண்டியில் துள்ளி ஏறி அமர்ந்தான். 'ஹை... ஹை' என்று வண்டியை ஓட்டத் தொடங்கினான். வண்டியின் முன்னால் ஆடுகளின் கூட்டம் சென்றது. வீட்டை நெருங்கும் சமயம் அவனுக்கு மூன்றாவது பழத்தையும் வெட்டி அதில் என்ன இருக்கிறது என்று பார்க்க மிகவும் ஆசை ஏற்பட்டது. பழத்தை வெட்ட யத்தனித்தபோது, அதுவும் மிகப் பெரிதாகி, பானை அளவு உப்பி இரண்டாகப் பிளந்தது.

இம்முறை அதிலிருந்து என்ன வந்ததென்று நினைக்கிறீர்கள்? ஓர் அதிரூபவதியான ராஜ குமாரிதான் வெளியே வந்தாள். கடைந்தெடுத்த சந்தனச் சிலை போன்ற உருவம். தேனினும் இனிய தன் குயில் போன்ற குரலினால், 'என்னைத் தங்கள் தந்தையிடம் அழைத்துச் செல்லுங்கள். அவர் ஆசியுடன் நான் தங்களை மணக்க விரும்புகிறேன்' என்றாள் அவள் புன்சிரிப்புடன்.


ஆயிரமாயிரம் ஆடுகள், அழகான இரட்டை மாட்டு வண்டி, அதி அற்புத அழகு வாய்ந்த ராஜகுமாரி ஆகியவற்றைக் கண்ட அவனுடைய தந்தைக்கு ஏற்பட்ட ஆனந்தம் கொஞ்சநஞ்சமில்லை. மறுதினமே அவனுக்கும் ராஜ குமாரிக்கும் மிகக் கோலாகலமாகத் திருமணம் நடந்தேறியது. அவனது மூத்த சகோதரர்கள் இருவரும் தமது தம்பியின் அதிர்ஷ்டத்தைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தனர் என்று சொல்லவும் வேண்டுமோ?

இரு "சாம்பியன்கள்"

★

இந்தப் படத்திலிருப்பவர்கள் யார்? தந்தையும் மகளுமா, அல்லது தாத்தாவும் பேத்தியுமா? அதுதான் இல்லை. இருவரும் அண்மையில் நடைபெற்ற மியூனிச் ஒலிம்பிக் பந்தயத்தில் தங்கப் பதக்கம் பெற்றவர்கள். ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? ஒருவர் ராட்சத உருவம் பெற்ற வாஸிலி அலெக்ஸியேவ். இவர் 'ஹெவி வெய்ட்' பிரிவில் முதலாவதாக வந்து தங்கப் பதக்கம் பெற்றார்; அந்தச் சிறுமி ஓல்கா கார்புத்— அவள்தான் சோவியத் ஒலிம்பிக் போட்டிக் குழுவிலேயே வயதில் சிறியவள் — ஜிம்னாஸ்டிப் போட்டியில் மூன்று தங்கப் பதக்கங்களைப் பெற்றாள்!






☐ நீங்கள் சர்க்கஸுக்குப் போயிருப்பீர்களே அங்கு 'பபூன்' காகிதம் ஒட்டிய வளையத்தைப் பிடித்துக் கொள்ள அதில் அவனுடைய தோழன் நாய் தாவிக் குதித்துக் காகிதத்தைக் கிழித்த படி இந்தப் பக்கம் வருமில்லையா? அதோ பபூன் கைக் காகித வளையத்தின் காகிதம் கிழிந்துவிட்டது. தாவி வந்த நாயை எங்கே காணோம்? பத்திரிகையை எல்

மூளைக்கு வேலை

லாப் பக்கங்களிலும் திருப்பிக் கொண்டே வாருங்கள். ஓடிப் போன நாய் ஒளிந்துகொண்டிருப்பது தெரியும்!


☐ சர்க்கஸில் குதிரைகளின் சவாரி ரொம்பச் சுவாரசியமான அயிட்டமாயிற்றே! அதோ! குதிரை வாலைக் குழைத்துக் கொண்டு கம்பீரமாக நிற்கிறது. சவாரி செய்பவரைக் காணோமே? இருக்கிறார். அந்தப் படத்துக்குள்




ளேயேதான் இருக்கிறார். பத்திரிகையைப் பல கோணங்களில் திருப்பிப் பாருங்கள். ஒளிந்து கொண்டுள்ள குதிரையோட்டி உங்கள் கண்ணில் படுவார்.

☐ கடற்கரைக்குப் போனால் கிளிஞ்சல் பொறுக்குவது உங்களுக்கு இஷ்டமான விளையாட்டு இல்லையா? அதோ மோகனும் சுதாவும் விதம் விதமான கிளிஞ்சல்களைப் பொறுக்கியிருக்கிறார்கள். அதில் 2, 4 எண்ணுள்ள கிளிஞ்சல்களைப் போலவே அதற்கு ஜோடியாக இரு கிளிஞ்சல்கள் கிடைத்திருக்கின்றன. அந்தக் கிளிஞ்சல்கள் எவை என்று கண்டுபிடியுங்கள்.





☐ அதோ கிட்டுவும் பட்டுவும் எதையோ பார்க்கிறார்கள். அது என்ன என்பது தெரிய வேண்டுமானால் 1லிருந்து 42 வரையில் உள்ள எண்களைப் பென்சிலால் சேர்த்துக் கொண்டு வாருங்கள். அப்போது அவர்கள் செய்துகொண்டிருந்த காரியமும் தெரிந்துவிடும்.



சுண்டு குண்டு சீமாத் தாத்தா

— சாமா —

வாசல் கதவு தடதடவென்று தட்டப்பட்டது. சீமாத் தாத்தா போய்க் கதவைத் திறந்தார்.

''வாங்க! வாங்க! ரொம்ப நாட்களாச்சு. யார் பார்த்தாயா?· நம்ம பரங்கிப்பேட்டை ஜமீன்தார் மகன் சுப்பையா. இப்போது இந்த ஊரில்தான் இருக்கிறாராம்'' என்றார் தாத்தா பாட்டியிடம். ''வாருங்கள்'' என்று பாட்டியும் வரவேற்க, சுப்பையா உள்ளே வந்தார். சுண்டுவும் குண்டுவும் சுப்பையாவைக்கூட வரவேற்கவில்லை. அவர்கள் கவனம் அவர் பின்னாலேயே வந்த ஒரு பெரிய அல்சேஷன் நாயின் மீதுதான் இருந்தது. பார்த்தால் பயங்கரம். ஆனால் ஒரு முயல் குட்டிபோல் எல்லார் மேலும் விழுந்து விளையாடத் தொடங்கியது அது. மோப்பம் பிடித்தபடி இங்குமங்கும் சுற்றியபோது சீமாத் தாத்தாவின் மீது உரசியபடியே போயிற்று. தாத்தா தவறிக் கீழே விழத் தெரிந்தார். சட்டென்று சமாளித்துக்கொண்டார். நாயைப் பற்றி ஏதேனும் சொன்னால் அதன் சொந்தக்காரரான ஜமீன் சுப்பையாவுக்குக் கோபம் வரப் போகிறதே என்று சும்மா இருந்தார். நாய் மோப்பம் பிடித்தபடியே சமையல் அறைக்குப் போயிற்று. பாட்டி தான் சாப்பிடுவதற்கு இலையில் பரிமாறி இருந்தாள். அதைத் தின்று தீர்த்தது. சுண்டுவும் குண்டுவும் நாயையே பின் தொடர்ந்தபடி இருந்தார்கள். அதன் சேஷ்டைகளைக் கண்டு அவர்களுக்கு ஏக ஆனந்தம்.


வீட்டுக்குள் வரும் காக்கை, குருவிகளையெல்லாம் ஓடி விரட்டியது நாய். பல ஜாடிகள் உடைந்தன. மேஜையின் மேல் உள்ள சாமான்கள் எல்லாம் உருண்டன. நாயை விரட்டினால் கடித்து விடுமோ என்ற பயம் தாத்தாவுக்கு. சுப்பையா என்ன நினைப்பாரோ என்ற தயக்கம் வேறு. இத்தனைக்கும் சுப்பையா நாயை மிரட்டவோ கூப்பிடவோ செய்யவே இல்லை.


சற்று நேரம் இப்படி வீடு அமளி துமளிப்பட்டுக் கொண்டிருக்கும்போது மோப்பம் பிடித்தபடி இதைவிடக் கொழுத்த நாய் ஒன்று சீமாத் தாத்தாவின் வீட்டுக்குள் நுழைந்தது. தாத்தாவுக்குக் கோபம் வந்தது. தடியை எடுத்து வந்து, ''சனியன்! கண்ட நாயெல்லாம் வீட்டில் நுழைகிறது!'' என்று விரட்டிக் கொண்டு போனார். அது குரைத்தது. சத்தம் கேட்டவுடன், ''இது என் ஜிம்மியின் குரலல்லவா?'' என்று ஓடோடியும் வந்து அந்தப் புது நாயை வரவேற்றார் சுப்பையா. ''மன்னிக்கணும்! இது உங்க நாயா? இரண்டு நாய்கள் வளர்க்கிறீங்களா?'' என்று கேட்டார் தாத்தா. ''இரண்டா? இதை மட்டும்தான் வளர்க்கிறேன். நான் எத்தனை தூரம் தள்ளிப் போனாலும் என் ஜிம்மி மோப்பம் பிடித்துக் கொண்டு வந்துவிடும்'' என்றார்.


தாத்தா உஷார் ஆனார். ''அப்ப முதலில் உங்ககூட வந்த நாய்?''

''என்னுடையது அல்ல. அது நீங்க வளர்க்கிற நாய் என்றல்லவா நான் நினைத்தேன்!'' என்ற சுப்பையாவின் பேச்சைக் கேட்ட சீமாத் தாத்தா 'மடார்' என்று தரையில் சாய்ந்தார்!




பலே பாலு!
கற்பனை: வாண்டு
சித்திரம்: செல்லம்
டேய், பாலு! தவளையின் வளர்ச்சியை நீ அனுபவ பூர்வமா ஆராய்ந்தது போதும். இந்தக் கண்ணாடிக் குவளையெல்லாம் கொண்டு போய்க் கொட்டுடா. அசிங்கம்.
சரிம்மா. உடனே இதுக்கு ஒரு ஏற்பாடு பண்ணறேன், கத்தாதே.
ஏய், சீனு. தவளையோட நாலு பருவ வளர்ச்சிகளிலே தலைப் பிரட்டைங்க வேணுமா? உன் கிட்டே இருக்கிற அந்தக் கப்பல் பொம்மையைக் கொடுத்தால், நான் இவைகளைத் தருவேன்.
எனக்கு உன் தலைப் பிரட்டை ஜாடிகள் வேணும். ஆறு ஆயுதம் கொண்ட பென்நைஃப் தெரியுமா? அது கொடுத்தா இதைத் தருவேன்.
இவ்வளவு தானே? அந்த மாதிரிப் பேனாக் கத்தி யாரு கிட்ட இருக்கும்னு எனக்குத் தெரியும்!
கிட்டு, டேய்! நீ அன்னிக்குக் கேட்டியே தலைப்பிரட்டைகளின் பருவங்கள், இதோ. உன்னோட பென் நைஃபை இதுக்கு மாத்திக்கலாமா?
இல்லேடா, எங்க வீட்டிலே இதையெல்லாம் வைச்சுக்க விடமாட்டாங்க. ஒரு காட்டபெல்ட் கொடுத்தியானா என்னோட கத்தியைத் தரேன்.
கந்தன் கிட்டே காட்டபெல்ட் இருக்கும். போய் பேசிப் பார்க்கலாம்
மன்னிச்சுக்கோடா பாலு. எனக்கு இந்தத் தவளை, தலைப்பிரட்டையெல்லாம் வயித்தைப் புரட்டற விஷயம். உங்கிட்டே உள்ள பழைய கோகுலம் பிரதிகளில் ஆறு கொடுத்தியானா என்னோட காட்ட பெல்டைத் தரேன்.
முனியா, அன்னிக்கு உங்கிட்டக் கொடுத்தேனே கோகுலம் பழைய இதழ்கள். அதெல்லாம் எங்கே, கொண்டா சீக்கிரம்.
சரிதான் போடா. கொடுத்தாக் கொடுத்தது தான். திருப்பித் தரேன்னு நான் சொன்னேனா?
சொல்லணுமா? இப்ப சொல்ல வைக்கிறேன் பாரு. அவ்வளவு தூரத்துக்கு வந்துட்டியா நீ..?
முனியன் கிட்டயாடா முண்டா தூக்கறே நீ?


பாலு, நீ ஜெயிச்சுட்டே. உன்னோட கோலியும் இதழ்களோ நீயே எடுத்துக்க.
இதை முதல்லியே கொடுத்திருந்தா, இந்தத் தலைப்பிரட்டை ஜாடியை உனக்குக் கொடுத்திருப்பேன். இப்ப எல்லாம் உடைஞ்சு பாழாப் போச்சு.
பண்ட மாற்று முயற்சியின் முடிவில் சீனுவிடம் கத்தியோடு வந்தபோது...
இந்தா சீனு நீ கேட்ட ஆறு ஆயுதங்கொண்ட பென் நைஃப். எங்கே உன்னோட கப்பல் பொம்மை?
நீ ரொம்ப லேட்டுடா. இப்பத்தான் சதீஷ் வந்தான். அவன் கிட்ட என் பொம்மையைத் அவன் கத்தியை மாத்திண்டேன்.
ஹேய், சதீஷ்! அந்தக் கப்பல் பாட்டிலைத் தரியா, இந்தக் கத்தியை நான் தரேன்.
ம் ஹூம். இப்பத்தான் நான் என் கத்தியைச் சீனுகிட்டக் கொடுத்துட்டு வரேன்.
எனக்குத் தலைப்பிரட்டைகள் உள்ள ஒரு ஜாடி வேணும். அதைக் கொடுத்தால் அதுக்குப் பதிலா இதைத் தரேன்...



தெரியுமா?

419. கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களுக்கு இங்கிலாந்தில் தடை விதிக்கப்பட்டது எப்போது தெரியுமா?

420. இரீடியம் என்றால் என்ன?

421. மிகப் பழைமையான தேசியக் கொடியை உடைய நாடு — இங்கிலாந்து, பிரான்ஸ், டென்மார்க் — இவைகளில் எது?

422. கிறுஸ்துமஸ் வாழ்த்து அட்டைகள் அனுப்பும் பழக்கம் எப்போதிருந்து ஆரம்பமாகியது?

423. பூனைக்கு எத்தனை விரல்கள்?

424. சூரியனுக்கு மிக அருகிலுள்ள கிரகம் எது?

425. கடல் நீரிலிருந்து ஓர் உலோகம் கிடைக்கிறது. அது எந்த உலோகம்?

426. வைரம் எதிலிருந்து உற்பத்தியாகிறது?

427. மெக்ஸிகோ நாட்டை எல்லையாகக் கொண்டிருக்கிறது ஒரு பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடு. அது எது?

428. ஹாட் ட்ரிக் (Hat Trick) என்றால் என்ன?

429. 'இன்வெர்ட்ட ப்ரேட்' என்று எந்தப் பிராணியைக் கூறுவார்கள்?

430. ஆமைகள் முட்டைகளை அடை காக்குமா? அவை எப்படிப் பொரிகின்றன?

431. ஒரே ஒரு திமில் உடைய ஒட்டகத்திற்கு என்ன பெயர்?

432. சூரியனைச் சுற்றி வரும் கிரகங்கள் எத்தனை? பெயர் குறிப்பிட முடியுமா?

433. புகழ்பெற்ற நாவல் 'இரு நகரங்களின் கதை' — Tale of Two cities — இதில் இரு நகரங்களாக வர்ணிக்கப்படுபவை எவை?

434. டிம்பக்டூ எங்குள்ளது?

435. மெல்பர்ன் — ஆஸ்திரேலியாவின் எந்த மாகாணத்தில் உள்ளது?

436. முதல் மகா யுத்தம் எந்த மாதத்தில் ஆரம்பமாயிற்று?

437. அனேக மம்மல்களின் கழுத்து ஏழு எலும்புகளின் சேர்க்கையால் ஆக்கப் பட்டிருக்கிறது. ஒட்டைச்சிவிங்கியின் கழுத்திலோ?

438. மின்சாரத்தை அளக்க 'வோல்ட்' என்கிறோம். இந்தப் பெயர் எப்படி வந்தது?

439. மோட்டாரில் கந்தகஅமிலம் எங்கு உபயோகிக்கப்படுகிறது?

440. கோபி பாலைவனம் எங்குள்ளது?

441. உலகிலேயே மிகப் பெரிய நீர்வீழ்ச்சியாகிய நயாகரா நீர்வீழ்ச்சியைப் பற்றிப் படித்திருப்பீர்களே. இது எந்த நதியினால் உண்டாகிறது?

442. மிகப் பெரிய உள்நாட்டுக் கடல் (Inland Sea) எது?


443. குழிக்குள் முயலைப் போலச் சுருண்டு படுத்துத் தூங்கும் பறவை எது?

444. சாதாரண சீதோஷ்ண நிலையில் திரவமாக இருக்கும் உலோகம் எது?

விடைகள் :

419. 1644ல் பார்லிமெண்டில் ஒரு சட்டம் இயற்றி. 420. பிளாடினம் க்ரூப் உலோகங்களில் ஒன்று இது. மிக உறுதியானது. 421. டென்மார்க். சிவப்புப் பரப்பில் வெள்ளைச் சிலுவையைக் கொண்டது. இதன் பிறப்பு 1218. 422. 1846ல். ஆயிரம் வாழ்த்து அட்டைகள் விற்கப்பட்டன. 423. பதினெட்டு-முன்னங்கால்களில் காலுக்கு ஐந்து. பின்னங்கால்களில் காலுக்கு நான்கு. 424. மெர்க்குரி. 425. மக்னீஷியம். 426. கரியிலிருந்து. 427. பிரிட்டிஷ் ஹோண்டுராஸ். 428. தொடர்ந்தாற்போல் மூன்று கோல்களையோ, மூன்று விக்கெட்டுகளையோ எடுப்பதை ஹாட் ட்ரிக் என்பார்கள். 429. முதுகெலும்பில்லாத பிராணிகளை. 430. சூடான மணலுக்குள் முட்டைகளை இடும். அவை தானாகப் பொரியும். 431. ட்ரோமடாரி. 432. ஒன்பது. பூமி, மெர்க்குரி, வீனஸ், ப்ளூடோ, சாடர்ன், மார்ஸ், ஜூபிடர், யுரானஸ், நெப்ட்யூன். 433. லண்டன், பாரிஸ். 434. சஹாரா பாலைவனத்தின் தென் முனையில். 435. விக்டோரியா மாகாணத்தில். 436. ஆகஸ்டில். 437. அதற்கும் ஏழு எலும்புகள்தான். 438. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு இத்தாலிய விஞ்ஞானியான கவுண்ட் ஓல்டா என்பவரின் நினைவாக. 439. பாட்டரியில். 440. மங்கோலியாவில். 441. நயாகரா நதியினால். 442. காஸ்பியன் கடல். 443. நியூஸிலாந்திலுள்ள கிவி. 444. பாதரஸம்.

தெரியுமே!



'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: சதாசிவம்

சந்தா விவரம்: ஒரு வருடம் ரு. 7-00 ○ ஆறு மாதம் ரு. 3-50 ○ வெளிநாடுகள் ரு. 18-00


‘‘‘ஜாக்கிரதையாகக் கையாளவும்’ என்று எழுதட்டுமா?’’

‘‘அவசியமில்லை. ஸதர்ன் ரோட்வேஸில்தானே அனுப்பப் போகிறோம் ?’’


பிரதி வருடமும் பல லட்சம் டன் எடையுள்ள பார்ஸல்களை ஸதர்ன் ரோட்வேஸ் சுமந்து சென்று சேர்க்கிறது. பார்ஸல்களை அது ஜாக்கிரதையாகக் கையாள்கிறது. ஒவ்வொருவரையும் தனி அக்கறையுடன் கவனித்து சேவை செய்கிறது. இதனாலெல்லாம்தான் அதனிடம் வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. பார்ஸல்களை ஏற்றுவது, எடுத்துச் செல்வது, இறக்குவது அனைத்தையும் விசேஷப் பயிற்சி பெற்ற ஊழியர்களே செய்கிறார்கள்.

ஆகவே உங்கள் பார்ஸல்களை ஸதர்ன் ரோட்வேஸ் நல்லபடியாகவும் பத்திரமாகவும் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் வியப்பில்லை.

வாடிக்கையாளர்களிடை வளர்ந்து வரும் நல்லெண்ணமும் நம்பிக்கையும்தான் தென்னகம்பூராவையும் தன் பார்ஸல் ஸர்வீஸினால் ஸதர்ன் ரோட்வேஸ் அரவணைக்கத் துணை புரிந்துள்ளது. தங்கள் பண்டங்களை அனுப்புவதற்கு மேன் மேலும் அதிக மக்கள் ஸதர்ன் ரோட்வேஸைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.



ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட்
டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று
மதுரை



FDSSR1714TMB